இலங்கை மத்திய வங்கி
தொடர்பூட்டல் திணைக்களம்

குறிப்பேடு

மலர் 28 இதழ் 1 - 2 2009 சனவரி-பெப்ருவரி

குழப்பங்களுக்கு மத்தியில் நிலையாயிருப்பதற்கு

இலங்கை மத்திய வங்கியின் சமூக, பொருளாதார இருமாத சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழப்பங்களுக்கு மத்தியில் நிலையாயிருப்பதற்கு...

உலகளாவிய நிதியியல் பிரச்சினை மென்மேலும் புரையோடிச் செல்கின்றது. மிகப் பலம்பொருந்திய பாரியதொரு நிதி நிறுவனமாக, மிக உயர் நிலையில் விளங்கிய 'லேமன் பிரதர்ஸ்' நிறுவனம் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து உலகளாவிய பொருளாதாரப் பிரச்சினை ஆரம்பமாகியது. ஐக்கிய அமெரிக்காவின் உப-முதன்மையான வீடமைப்புக் கடன் சந்தையை மையமாகக் கொண்டு பரவிச் சென்ற பிரச்சினையே இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. இச்சூழலில் நிதியியல் முறைமையின் உறுதித் தன்மையைப் பற்றி ஆராய்தல் காலத்திற்குப் பொருத்தமானதாக இருக்கும்.

ஒரு நாட்டின் நிதியியல் முறைமையில் அந்நாட்டின் மத்திய வங்கி, நிதியியல் உட்கட்டமைப்பு வசதிகள், நிதி நிறுவனங்கள், நிதிக் கருவிகள், நிதிச் சந்தை மற்றும் நிதிச் சந்தைக்குரிய ஏனைய ஒழுங்குமுறையாக்கல் மேலாண்மை நிறுவனங்கள் உள்ளடங்குகின்றன. இவை அனைத்தும் நிதிக் கொள்கையை அமுலாக்குவதற்கும் பொருளாதாரக் கொடுக்கல் வாங்கல்களை மிருதுவாகப் பேணிவருவதற்குமான வசதிகளை ஏற்பாடு செய்கின்றன. குடும்ப அலகுகளின் சேமிப்புகளை முதலீடுகளின்பால் ஈடுபடுத்துகின்ற கடமையையும் நிதியியல் முறைமை நிறைவேற்றுகின்றது. ஆதலால் சிறந்த முறையில் செயற்படுகின்ற ஒரு நிதியியல் முறை ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அத்தியாவசியமாகும் என்பதில் கருத்து வேறுபாடு கிடையாது.

நிதியியல் முறைமையின் பிரச்சினைகளின் காரணத்தினால் நாணயக் கொள்கையின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற குறிக்கோள்களை நிறைவு செய்து கொள்வதற்கு இயலாமற்போகலாம். மேலும், பொருளாதார வளர்ச்சியில் வீழ்ச்சி ஏற்படுமெனில், அவ்வீழ்ச்சி, இதன் காரணமாக மிக ஆழமாக வேரூன்றிய, நீடித்திருக்கக்கூடிய ஒன்றாக மாறலாம். பிரச்சினை மேலும் தீவிரமடையுமெனில், நாட்டின் மூலதனம் வெளிநோக்கிப் பாய்வதற்கு ஆரம்பிக்கும். இன்றேல், நிதி நிறுவனங்களை வீழ்ச்சியடையாது பேணிவருவதற்கு மக்களின் பணத்தை இடுவதற்கு நேரிடும். இன்று உலகம் பூராவும் அநேகமாக இந்த நிலைமையே உருவாகி வருகின்றது.

இவ்வீழ்ச்சிக்கு ஏதுவாயமைந்த பல காரணங்கள் உள்ளன. சாதாரண மனிதர்களிடையே நிலவுகின்ற தூரநோக்கற்ற தன்மை, அதிகளவில் பணத்தைத் திரட்டுவதற்கான பேராசை, மேற்படி கெட்ட பண்புகளின் இரகசியத்தை அறிந்துள்ள, 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளும்' குறிக்கோளைக் கொண்ட 'சக்வித்தி' போன்றோரின் திறமைகளும் இக்காரணங்களில் முன்நிலையிலிருப்பது மானிடத்திற்கு ஓர் இழுக்காகும். இத்தடவை 'குறிப்பேடு' மூலம் 'நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு' பற்றிய விடயங்களை ஆராய்வதற்கும், 'பொன்சி முறையின்' ஸ்தாபகரான சால்ஸ் பொன்சியைப் பற்றிய விடயங்களைக் கூறுவதற்கும் அதிக இடத்தினை ஒதுக்கியுள்ளது இதனாலாகும்.

குறிப்பேடு

ISSN 1391-7676

2008 சனவரி/பெப்ருவரி

ஒரு பிரதியின் விலை : ரூபா 10.00
வருடாந்த சந்தா : ரூபா 240.00
(தபாற் கட்டணத்துடன்)

தொடர்பூட்டல் பணிப்பாளர், இலங்கை மத்திய வங்கி எனக் குறிப்பிடப்பட்ட காசுக்கட்டளைகள்/ காசோலைகள் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுவதன் மூலம் "குறிப்பேடு" சஞ்சிகையை மாதாந்தம் அஞ்சலில் பெற்றுக்கொள்ளலாம்.

பணிப்பாளர்,
தொடர்பூட்டல் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
த.பெ.இல. 590, கொழும்பு.

கட்டுரைகள்:

பக்கம் 3
இலங்கையின் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டிற்கான மத்திய வங்கியின் கடமைகள்

பக்கம் 6
பணவீக்கத்தையிட்டு அச்சமடைய வேண்டியது ஏன்?

பக்கம் 10
பணம் படைக்கும் மந்திரம் - பொன்சி முறை

பக்கம் 14
இலங்கைக்கான ஒரு சுபீட்ச சுட்டெண்

பக்கம் 19
மத்திய வங்கியைப் பற்றி...

"குறிப்பேடு" சஞ்சிகையில் இடம்பெறும் கருத்துக்கள், கட்டுரை ஆசிரியரின் கருத்துக்களேயொழிய இலங்கை மத்திய வங்கியின் கருத்துக்களாகாதிருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் கடமைகள்

நிலூகா பரணகம
உதவிப் பணிப்பாளர்
கொள்கை மீளாய்வு கண்காணிப்புத் திணைக்களம்

1. நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு

பொருளாதார, நிதியியல், அரசியல் அல்லது வேறு ஏதேனுமொரு துறையினால் உள்வாரியாக அல்லது வெளிவாரியாக விடுக்கப்படுகின்ற அதிர்ச்சிகளின் முன்னிலையில் நிலைத்திருப்பதற்கு நிதியியல் முறைமைக்கு உள்ள ஆற்றலை நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு எனக் குறிப்பிடலாம். குடும்பங்கள், தொழில்துறை நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கிடையே நடைபெறுகின்ற நிதிக் கொடுக்கல் வாங்கல்களுக்கு ஏற்படுகின்ற தடைகளின் காரணமாக ஒட்டுமொத்தமான பொருளாதாரமும் செலவினத்தை ஏற்க நேரிடாத நிலைமையினை உருவாக்குதல் எனவும் இதனைக் குறிப்பிடலாம்.

நிலையான பேரண்டப் பொருளாதாரச் சுற்றாடல், சிறந்த கட்டுப்பாட்டுடன் கூடிய பலம் பொருந்திய நிதி நிறுவனங்கள், வினைத்திறன்மிக்க நிதிச் சந்தை, சிறந்த முறையில் மேற்பார்வை செய்யப்படுகின்ற பாதுகாப்பானதும் நம்பகத் தன்மையுடன் கூடியதுமான கொடுப்பனவு தீர்ப்பனவு முறைமை ஆகிய பல காரணிகளின் இடைத்தொடர்புகளில் நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு தங்கியுள்ளது.

இதன் பிரகாரம், நிதி நிறுவனங்களும் நிதிச் சந்தைகளும் பல்வேறு அதிர்ச்சிகளுக்கும் தாக்குப் பிடிக்கக்கூடிய ஆற்றலை வளர்த்தல், சிறந்த முறையிலான நிறுவனக் கட்டுப்பாடு, சாதகமான நிதி மற்றும் அரச வரவு செலவுத் திட்டக் கொள்கைகள் மற்றும் உயர் வளர்ச்சியை உருவாக்கக் கூடியதான உண்மைத் துறையொன்று இருத்தல் ஆகியவற்றின் ஊடாக நிதியியல் உறுதிப்பாட்டினைப் பேணிவர முடியுமாயிருக்கும்.

2. நிதியியல் உறுதிப்பாடு, வங்கி முறை மற்றும் மக்கள் நம்பகத்தன்மை

நிதியியல் முறையின் இயல்பு மற்றும் சிறந்த செயற்பாடு தொடர்பில் பொதுமக்களிடையே சிறந்ததொரு புரிந்துணர்வு இருப்பின் மற்றும் அவர்களின் நம்பகத்தன்மை தொடர்ந்து இருக்குமெனில், நிதியியல் முறையின் உறுதிப்பாடு பாதுகாக்கப்படும். நிதியியல் உறுதிப்பாட்டின்போது தொழில்துறை நிறுவனங்களினதும் தனிநபர்களினதும் அன்றாட செயற்பாடுகளுடன் இறுக்கமாகப் பிணைந்துள்ள நிறுவனங்களான வங்கிகள் முதன்மை இடத்தை வகிக்கின்றன. இதில் தனியொரு வங்கியின் உறுதிப்பாட்டைப் போன்றே ஒட்டுமொத்தமான வங்கி முறையின் வெற்றிகரமான செயற்பாட்டிற்கு 'பொதுமக்களின் நம்பகத்தன்மை' மிக முக்கியமானதாகும்.

ஏதேனுமொரு வங்கி தொடர்பிலான பொதுமக்களின் நம்பகத்தன்மை வீழ்ச்சியுறுகின்றபோது அது வெற்றியடையாது என்பதோடு, இவ்வாறு தனியொரு வங்கியின் வெற்றியளிக்காமை ஏனைய வங்கிகள் தொடர்பாகவும் அதேபோன்று ஒட்டுமொத்தமான வங்கி முறை தொடர்பாகவும் உள்ள பொதுமக்களின் நம்பகத்தன்மை முறிவடைவதற்குக் காரணமாக அமையலாம். இதன் காரணமாக வங்கிகள் தமது வைப்புகளுக்கு உரிய காலத்தில் கொடுப்பனவுகளைச் செய்யத் தவறிவிடும் என்ற அச்சம் வைப்பாளர்களிடையே உருவாகும். அப்போது அவர்கள் தமது வைப்புப் பணத்தின் மீள்பெறுகைகளுகான வேண்டுகோள்களை விடுப்பார்கள் என்பதோடு, அதன் காரணமாக வங்கி பலத்ததொரு 'திரவத் தன்மைப் பிரச்சினைக்கு' முகம்கொடுக்கும். இது ஒரு வங்கி முறிவடைவதற்கான ஆரம்பமாக அமையலாம்.

இங்கு 'திரவத் தன்மைப் பிரச்சினை' என, வைப்பாளர்களின் பணத்திற்கான கேள்வியை நிறைவேற்ற வங்கிக்கு இயலாமற்போகின்ற நிலைமை உருவாதலையே குறிப்பிடுகிறோம். ஆயினும், ஒரு வங்கியில் திரவத் தன்மைப் பிரச்சினை உருவாவதால் மட்டும் வங்கி முறிவடையாது என்பதோடு, இது ஒரு வங்கி முறிவடைவதற்கு மிக முன்னதாக உருவாகின்ற ஒரு நிலைமையாக மாத்திரம் அமையலாம். எனினும், இந்நிலைமை வங்குரோத்து நிலையின் ஆரம்ப அடையாளமாக இருக்குமென்பதால், திரவத் தன்மைப் பிரச்சினையை சிறிதாகக் கருதவும் முடியாது. குறிப்பாக பொதுமக்களின் நம்பகத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுவதன் காரணமாக முன்னரை விட வைப்புகள் தொடர்பிலான கேள்வி அசாதாரணமான விதத்தில் அதிகரிப்பதன் மூலம் மேற்படி திரவத் தன்மைப் பிரச்சினை தீவிரமடையலாம். கடந்த காலத்தில் உருவாகிய 'செலான் வங்கி' சம்பவமும் வங்கித் திரவத் தன்மைப் பிரச்சினைக்கு சிறந்ததொரு உதாரணமாகும்.

3. நிதியியல் உறுதிப்பாடின்மை

நிதியியல் உறுதிப்பாடின்மை என்பது வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் கொடுப்பனவு முறைகள் ஆகியவற்றின் முறிவடைதல் அதிகளவில் பரவிச் செல்கின்ற ஒரு நிலைமையாகும். இவ்வாறானதொரு நிலைமையில் பொதுமக்களினதும் பொருளாதாரத்தினதும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிக் கொடுக்கல் வாங்கல்களுக்கு தடைகள் ஏற்படும். உதாரணமாக, வெற்றியளிக்காத நிதி நிறுவனங்களின் வைப்பு உரிமையாளர்கள் அவர்களது சேமிப்புகளை இழப்பார்கள் என்பதோடு, தொழில்துறை நடவடிக்கைகளுக்குத் தேவையான கடன் வசதிகளைப் பெற முடியாமற்போவதன் மூலம் நிறுவன மற்றும் வர்த்தக சமூகம் கஷ்டங்களுக்கு உள்ளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கிகளின் நாணயத் தீர்ப்பனவுச் செயற்பாடுகளின் ஊடாக பணம் கிடைக்கவேண்டியுள்ள தரப்பினர்களுக்குத் தமது பணம் கிடைக்காது என்பதோடு, வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களிலும் கடும் தாக்கம் ஏற்படும். இதன் பாதகமான பெறுபேறுகள் ஏனைய வங்கிகளிலும், நாட்டின் ஒட்டுமொத்தமான நிதியியல் முறைமையிலும், பொருளாதாரத்திலும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தலாம். ஒரு வங்கி முறிவடையும் நிலைமைக்கு உள்ளாவதற்கு முன்னர் அதனைத் தவிர்க்கும் பொருட்டு ஏதேனுமொரு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியுள்ளது இதனாலாகும்.

பல நாடுகளில் நிதியியல் உறுதிப்பாடின்மையின் காரணமாக உருவாகிய இவ்வாறான பாதகமான பெறுபேறுகளாக, 1994-95 இல் மெக்சிகோவில், 1997-98 இல் கிழக்கு ஆசியாவில், 1998 இல் ரஷ்யாவில், 1999 இல் பிரேசிலில், 2001 இல் துர்க்கியில், 2001-02 இல் ஆர்ஜன்டீனாவில் உருவாகிய மற்றும் 2007இன் மத்திய பகுதியில் ஐக்கிய அமெரிக்காவிலிருந்து ஆரம்பமாகிய நிதியியல் பிரச்சினைகளை உதாரணமாகக் காட்டலாம்.

4. நிதியியல் உறுதிப்பாடின்மை தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் கடமைப் பொறுப்பு

இலங்கை மத்திய வங்கியின் பிரதானமான இரண்டு குறிக்கோள்களில் ஒன்று, நிதியியல் முறையின் உறுதிப்பாட்டினைப் பேணிவருதலாகும். இதன் பொருட்டு மத்திய வங்கியானது, வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களைப் போன்றே கொடுப்பனவு முறைகளை ஒழுங்காக்கி மேற்பார்வை செய்து வருகின்றது. இதன் பொருட்டுத் தேவையான சட்ட ஒதுக்கீடுகள் நாணய விதிச் சட்டம், வங்கித் தொழில் சட்டம் மற்றும் நிதிக் கம்பனிகள் சட்டத்தில் உள்ளடங்கியுள்ளதோடு, வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குமுறையாக்குவதற்கு செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தையும் அமுல்படுத்துகின்றது. இவ்வாறான சட்ட ஒதுக்கீடுகளின் கீழ் கடைப்பிடிக்கப்பட்ட மதிநுட்பமுடைய நடவடிக்கைகளின் ஊடாக தற்போதைய நிதியியல் பிரச்சினை போன்ற பாரதூரமான நிதியியல் பிரச்சினைகளின் போது கூட நிதியியல் முறைமைக்கு ஏற்படுகின்ற பாதகமான தாக்கங்களைக் குறைப்பதற்கு மத்திய வங்கியினால் இயலுமாயிருந்தது.

5. நிதியியல் உறுதிப்பாட்டினைப் பேணிவரும் பொருட்டு மத்திய வங்கியினால் அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒருசில நடவடிக்கைகள்

நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினைப் பேணிவருதல், மத்திய வங்கிக்கு சட்ட ரீதியில் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைப்பொறுப்பின் ஒரு பகுதியாக உள்ளதால், நிதியியல் முறைக்கு ஏற்படுகின்ற இடர்நேர்வுகள் மற்றும் பாதகமான நிலைமைகளை அடையாளம்காணும் பொருட்டும், நிதியியல் முறைமையின் உறுதிப்பாடின்மைக்குக் காரணமாக அமைகின்ற தடைகள் மற்றும் குழப்பங்களுக்கு முகம்கொடுக்கக்கூடிய ஆற்றலை மதிப்பிடும் பொருட்டும், மூலதனப் போதுமாந்தன்மை பற்றிய தேவை, செயலிழந்த கடன்களுக்கான ஒதுக்கீடுகள், கடன்களைத் தரமிடுதல் ஆகிய கருவிகளின் ஊடாக மத்திய வங்கி தன்னுடைய மதிநுட்பமுடைய பரிசீலனைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்தது. நிதியியல் உறுதிப்பாட்டின் பொருட்டு மத்திய வங்கி அண்மைக் காலத்தில் கடைப்பிடித்த நடவடிக்கைகளில் ஒருசிலவற்றை மட்டும் பின்வருமாறு சுருக்கமாகக் காட்டலாம்.

செலாவணிக் கட்டுப்பாடு நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டின் பொருட்டு முதன்மையானதாக விளங்குகின்றது. இங்கு குறிப்பாக இலங்கையின் மூலதனக் கணக்கினை தொடர்ந்தும் முழுமையாகத் தாராளமயப்படுத்தாத நிலைமையினுள் இலங்கையில் முதலீடு செய்யப்பட்டுள்ள வெளிநாட்டு மூலதனம் வெளிவாரி அதிர்ச்சிகளின்போது கூட ஒரே தடவையில் நீக்கப்படுதல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் நிதியியல் முறைமைக்கு ஏற்படுகின்ற கடுமையான தாக்கம் குறைந்துள்ளது.

தற்போதைய உலகளாவிய நிதியியல் பிரச்சினையின் முன்நிலையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிச் சந்தையின் உறுதிப்பாட்டினைப் பேணிவரும் பொருட்டு அனைத்து ஏற்றுமதிகள், இறக்குமதிகள் மற்றும் போட்டி ரீதியிலான கைத்தொழில்களை போட்டி ரீதியில் பேணிவந்து, உண்மைத் துறையில் ஏற்படுகின்ற அழுத்தத்தைக் குறைக்கின்ற ஒரு நடவடிக்கையாக இலங்கை மத்திய வங்கி ரூபாவின் பெருமதியில் அதிகளவு தளம்பல் ஏற்படாத வகையில் பேணி வருவதற்கு நடவடிக்கையெடுத்துள்ளது. இதன் பெறுபேறாக உலகளாவிய சந்தையில் ஏற்றுமதித் துறை, தொடர்ந்தும் எதிர்காலத்தில் உயர் செயலாற்றத்துடன் செயற்பட்டு அதன் போட்டி நிலையை வளர்த்துக்கொள்ளும் பொருட்டு உற்பத்தித் திறனையும் செலவின வினைத்திறனையும் வளர்த்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். மேலும், செலாவணி வீதம் தேய்வடைதல் குறைந்த மட்டத்தில் நிலவியமையின் காரணமாக, அதன் மூலம் இறக்குமதிச் செலவினம் அதிகரிப்பதற்குள்ள தாக்கமும் அரச படுகடன்களின் மீள்கொடுப்பனவுச் செலவினம் அதிகரிப்பதற்குள்ள தாக்கமும் குறைவாயிருப்பதனால் பணவீக்கத்தின் மீது ஏற்படுகின்ற தாக்கத்தினை தணிப்பதற்கு இது உதவியாயமையும்.

செலாவணி வீதம் அனாவசியமான விதத்தில் தளம்பலுக்குள்ளாவதைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய வங்கி அண்மைக் காலத்தில் 'அத்தியாவசியமல்லாத பண்டங்கள்' என அடையாளம் காணப்பட்டுள்ள ஒருசில வகைப் பண்டங்களை இந்நாட்டிற்கு இறக்குமதி செய்வதற்காக இறக்குமதியாளர்கள் வங்கிகளில் நாணயக் கடிதங்களைத் திறக்கின்ற போது வைப்பிலிட வேண்டிய பணத் தொகையை அதிகரித்ததோடு, முன்கூட்டிச் செலுத்துகின்ற அடிப்படையிலான, இறக்குமதிகள் மீதான குறைந்தபட்ச வைப்புத் தேவையை (Documents Against Acceptance – DA) திருத்தியது.

இதன் மூலம், அனாவசியமான விதத்தில் பண்டங்களின் வகைகள் இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுதலும், செலாவணி வீதம் அனாவசியமான விதத்தில் தளம்பலுக்கு உள்ளாதலும், வெளிநாட்டு ஒதுக்குகள் வீழ்ச்சியடைதலும் ஓரளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டது.

மேலும், வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவு மற்றும் விற்பனைக்கான முன்நோக்கிய ஒப்பந்தங்களுக்கு (Forward Contracts) வருவதை மட்டுப்படுத்துவதற்கும், இறக்குமதி விலைப் பட்டியல்கள் முன்கூட்டிச் செலுத்தப்படுவதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுப்படுத்துவதற்கும் மத்திய வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் திறைசேரி உண்டியல்கள் (Treasury Bills), திறைசேரி முறிகள் (Treasyry Bonds) மற்றும் வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்குகள் (Foreign Investment Deposit Accounts) ஆகியவற்றில் முதலீடு செய்வதை 10% மட்டுப்பாட்டுக்கு உள்ளாக்கியமையின் காரணமாக மூலதனத்தின் திடீர் நீக்குதலின்போது கூட இலங்கையின் நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு பாதுகாக்கப்பட்டது.

வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவு மற்றும் விற்பனை தொடர்பில் உரிமப் பத்திரம் பெற்றுள்ள வர்த்தகர்களுக்கு (Authorized Dealers) வழங்கப்பட்டுள்ள தொழிற்பாட்டு ஆலோசனைகள் (Operating Instructions) திருத்தப்பட்டமையின் மூலம் அனாவசியமான வெளிநாட்டுச் செலாவணிப் பயன்பாட்டினைக் குறைக்க முடியுமாயிருந்தது.

இதைத் தவிர நிதி நிறுவனங்களின் பாதுகாப்பின் பொருட்டு இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்கான மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறையாக்கல் காரணமாயமைந்தது. 2000 ஆம் ஆண்டிலிருந்து மத்திய வங்கி வங்கி மேற்பார்வையைப் பலப்படுத்தியுள்ளதோடு, 2007 ஆம் ஆண்டிலிருந்து வங்கிகளுக்கு நல்லாட்சி சட்ட விதிகளை (Corporate Governance) கடைப்பிடித்தல் கட்டாயமாக்கப்பட்டது. மேலும், 2008 சனவரி மாதத்திலிருந்து அமுலாக்கப்படுகின்ற பாசல் 11 மூலதனப் போதுமாந்தன்மை நியமத்தின் ஊடாக வங்கிகளுக்கு ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவத்தை ஊக்குவிக்கும் பொருட்டான கட்டமைப்பொன்றை மத்திய வங்கி சமர்ப்பித்துள்ளது. இவ்வாறான இடர்நேர்வு முகாமைத்துவத்தின் மூலம் கடனை மீளப் பெறுகின்ற முறை மற்றும் கடன் பெறுகின்றபோது விதிக்கப்பட்ட தேவைகளின் மூலம் கடனைச் திருப்பிச் செலுத்தாதிருக்கின்ற வீதத்தைக் குறைத்துக்கொள்வதற்கு வங்கி முறைமையினால் முடியுமாயுள்ளது. மேலும் தொழிலை தொடர்ந்து நடாத்தும் திட்டத்தின் (Business Continuty Plan) பிரகாரம் செயலாற்றுவதற்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் மூலதனம், சொத்துக்களின் தரம், மீள்காப்புறுதி, ஆயுட்காலக் கணிப்பீடு, முகாமைத்துவம், வருவாய், திரவத்தன்மை மற்றும் வங்குரோத்தற்ற நிலை பற்றிய தரமிடல்களின் பிரகாரம் வங்கிகளின் இடர்நேர்வு மீது நிறையேற்றப்பட்ட மேற்பார்வையும் நிதியியல் உறுதிப்பாட்டுக்குக் காரணமாயமைந்தது.

இவற்றைத் தவிர எதிர்கால ஒப்பந்தங்கள் தொடர்பாக உரிமப்பத்திரம்பெற்ற வர்த்தக வங்கிகள் மீது புதிய நிபந்தனைகள் பல விதிக்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம், முதிர்ச்சிக் காலத்தை 180 நாட்களுக்கு மட்டுப்படுத்துதல், ஒப்பந்தப் பெறுமதியில் 100% வைப்பை இலங்கை ரூபாவில் வைத்திருத்தல், ஒப்பந்தங்களைத் தடை செய்வது தொடர்பில் அபராதத் தொகையொன்றை விதித்தல், ஒப்பந்தத்தின் முதிர்ச்சியானது கொடுப்பனவு செய்யப்பட்ட தினத்தைவிட அதிகரிக்காதிருத்தல் மற்றும் வீடமைப்புக் கடன்களுக்கான இடர்நேர்வின் மீது நிறையேற்றுதலை 50% இல் இருந்து 55% வரை அதிகரித்தல் ஆகியனவும் நடைபெற்றுள்ளன. மேலும், எதிர்காலத்தில் உருவாகக்கூடிய பிரச்சினைகளுக்கு வெற்றிகரமாக முகம்கொடுக்கும் பொருட்டு வங்கிகளின் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகளைப் பலப்படுத்தும் நடவடிக்கையாக கடன் இடர்நேர்வு முகாமைத்துவத்திற்குத் தேவையான மதிநுட்பத் தேவைகளை விதித்தல், திரவத் தன்மையைச் சிறந்த முறையில் பேணிவருவதற்கு ஆலோசனை வழங்கல், வங்கிகளின் உரிமையை விரிவாக்கும் பொருட்டு புதியதொரு கொள்கையை அறிமுகப்படுத்தல், வங்கிகளின் பங்குகளை வைத்திருப்பதில் மட்டுப்பாடுகளை விதித்தல், தனிநபர் கடன்களுக்கான மட்டுப்பாடுகளை விதித்தல் ஆகிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்கள் நாட்டினுள் சுதந்திரமாகச் செயற்படுவதனை மட்டுப்படுத்தும் பொருட்டு இலங்கை மத்திய வங்கி கடந்த காலத்தில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. பொதுமக்களின் பண வைப்பைப் பெற்றுக்கொள்ளும் பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்கள் தொடர்பாக மத்திய வங்கி தொடர்ச்சியாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு, இது தொடர்பில் நிதிக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்து வருகின்றது. மேலும், மத்திய வங்கியின் நோக்கமாகவுள்ள நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டைப் பாதுகாக்கும் பொருட்டு தேவையான ஒழுங்குவிதிகள், ஏற்பாடுகள் மற்றும் கட்டளைகள் வழங்கப்படுவதன் மூலம் பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனங்களின் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறையாக்கலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றது.

உலகளாவிய நிதியியல் பிரச்சினையின் முன்னிலையில் உள்நாட்டு நிதிச் சந்தைத் திரவத் தன்மையைப் பேணிவருதல்

உலகளாவிய நிதியியல் பிரச்சினையின் முன்னிலையில் உலகின் பெரும்பாலான பொருளாதாரங்கள் திரவத் தன்மைப் பற்றாக்குறைக்கு முகம்கொடுத்து வருகின்ற போதிலும், மத்திய வங்கி தனது கடுமையான நிதிக் கொள்கையைத் தளர்த்தி

இதன் தொடர்ச்சி 18 ம் பக்கத்தில் ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணவீக்கத்தையிட்டு அச்சமடைய வேண்டியது ஏன்?

டபிள்யூ. ஏ. விஜேவர்தன
பிரதி ஆளுநர்

பணவீகம், அதாவது நீண்ட காலமாக பொது விலை மட்டம் தொடர்ச்சியாகவும் நிலையானதாகவும் அதிகரித்துச் செல்லுதல், பொதுமக்களின் முதலாவது எதிரியாகும் எனக் குறிப்பிடலாம். அதேபோன்று, அதி-பணவீக்கம், அதாவது குறுகிய காலத்தினுள் பொது விலை மட்டம் தீவிரமாக அதிகரித்தல், பெரும் தொகையான மனிதர்களை ஒரே தடவையில் கொலை செய்யக்கூடிய பயங்கரமான ஓர் ஆயுதத்திற்கு சமனாகும். சிம்பாப்வே மத்திய வங்கியின் ஆளுநர் Gideon Gono அந்நாட்டின் பணவீக்க வீதம் ஓர் ஆண்டினுள் 3,700 சதவீதத்தை தாண்டிய போது, "பணவீக்கத்தை", ஆயிரக்கணக்கான மனிதர்களை இறக்கச் செய்கின்ற HIV வைரசுக்கு ஒப்பிட்டார்[1]. இத்தெளிவான அறிமுகம் பணவீகத்தின் காரணமாக ஒரு நாட்டிற்கு ஏற்க நேரிடுகின்ற செலவினத்தின் கடுமையான தன்மையை விளக்குகின்றது.

பொதுமக்களின் முதலாவது எதிரியாக அமைவது ஏன்?

பொருளியலாளர்களது கண்ணோட்டத்தில் நோக்குகின்றபோது, பணவீக்கம் மற்றும் தொழிலின்மை என, பொதுமக்களின் முக்கியமான இரண்டு எதிரிகளை அடையாளம் காணலாம். மேற்படி இரண்டு எதிரிகளிலும் முதன்மையானதாக உள்ளது பணவீக்கமாகும். பணவீக்கத்தின் காரணமாக வங்கியாளர்கள், தொழில்துறையினர், தொழிலாளர்கள், நுகர்வோர் என்றவாறு மக்கள் சமூகத்திலுள்ள அனைவரும் பாதிக்கப்படுதலே இதற்கான காரணமாகும். தமது வருமானத்தை பணவீக்க வேகத்தை விட அதிக வேகத்தில் அதிகரிக்கச் செய்ய முடியுமாயுள்ள சிறு குழுவினருக்கு மட்டுமே பணவீக்கத்தின் பாதிப்பிலிருந்து தப்பலாம். ஆதலால், ஏனைய பெரும்பாலானவர்கள், பயங்கரமானதொரு ஆயுதத்தால் தாக்கப்படுவதைப் போன்று, பணவீக்கம் எனும் எதிரியிடமிருந்து துன்பத்திற்குள்ளாவதற்கு நேரிடும். ஆயினும், பொதுமக்களின் மற்றைய முக்கியமான எதிரியான தொழிலின்மையினால் தொழிலற்றவர்கள் மாத்திரமே பாதிக்கப்படுவார்கள். தொழிலற்றவர்கள் சமூகத்தில் சிறு தொகையினராக மட்டுமே உள்ளனர் என்பதோடு, பணவீக்கத்தால் பாதிக்கப்படுபவர்கள் பெரும்பான்மையினராக இருப்பர். இப் பொருளின்படி நோக்குகின்றபோது, பணவீக்கம் தொழிலின்மையை முந்திச் சென்று பொதுமக்களின் பிரதானமான எதிரியாக மாறுகின்றது. ஒருவர் போதைப் பொருட்களின் பயன்பாடு, பயங்கரவாதம் ஆகிய சமூக பின்னடைவுகளையும் பொதுமக்களின் எதிரிகளாகக் குறிப்பிடலாம். ஆயினும், அத்தகைய எதிரிகள்கூட சமூகத்தில் ஒரு பிரிவினரை மட்டுமே பாதிக்கச் செய்யும். ஆதலால், பணவீக்கத்தால் அனைவரும் துன்பப்பட வேண்டி நேரிடுதல் மற்றும், பணவீக்கத்திலிருந்து தப்புவதற்கு பொதுமக்களுக்கு மிகவும் வரையறுக்கப்பட்டதொரு வாய்ப்பே உள்ளது என்ற விடயங்களைக் கவனத்திற் கொள்கின்றபோது பணவீக்கம் தானாகவே முதலாம் இலக்க எதிரியாக மாறுகின்றது.

பணவீக்கம் தொடர்பான நகைப்புக்குரிய கதைகள்

அண்மைக் கால வரலாற்றில் அதி-பணவீக்கத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகள் தொடர்பான பல உதாரணங்கள் உள்ளன. அவற்றில், முதலாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் ஜேர்மனியில் உருவாகிய பணவீக்க நிலைமை குறிப்பிடத்தக்கதாயிருந்தது. அக்காலகட்டத்தில், ஜேர்மனியின் வருடாந்த பணவீக்கம் 1,000,000 சதவீதமளவு அதிவேகமாக இருந்தது. அண்மிய தசாப்தங்களில் பொலீவியா (வருடாந்த பணவீக்கம் 25,000 சதவீதம்), ரஷ்யா (வருடாந்த பணவீக்கம் 2,000 சதவீதம்), இஸ்ரேவேல் (வருடாந்த பணவீக்கம் 1,500) சதவீதம், ஆகிய நாடுகளில் அதி-பணவீக்க நிலைமைகள் அறிக்கையிடப்பட்டன. சிவில் யுத்தத்தின் பின்னர் 1990-95 காலத்தினுள் சனநாயக கொங்கோ குடியரசில் பணவீக்க வீதம் 6.3 பில்லியன் சதவீதமாக அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆயினும் இந்த அனைத்து சாதனைகளையும் முறியடித்து, சிம்பாப்வேயின் பணவீக்கம் ஆண்டுக்கு 750 பில்லியன் சதவீத வேகத்தில், அதாவது ஒவ்வொரு நொடியும் 25,000 சதவீத வேகத்தில், 2008 செப்தெம்பர் இறுதியில் அதிகரித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

இவ்வாறான அதிகளவிலான விகிதாசாரத்தில் விலை அதிகரிக்கின்றபோது, முதலாவதாக அந்நாட்டின் உள்நாட்டு நாணயம் மதிப்பிழக்கின்றது. உள்நாட்டு நாணயத்தின் பெறுமதி மிக விரைவாக வீழ்ச்சியடைவதன் காரணமாக, கொடுக்கல் வாங்கலின் பொருட்டு உள்நாட்டு நாணயத்தை ஏற்பதற்கு எவரும் விரும்ப மாட்டார்கள். அதற்குப் பதிலாக பொதுமக்கள் ஐக்கிய அமெரிக்க டொலர் போன்ற பலம் பொருந்திய நாணய அலகுகளை ஏற்க ஆரம்பிப்பார்கள். மேற்படி பலம்பொருந்திய நாணயங்கள் பற்றாக்குறையாக உள்ளவிடத்து, மக்கள் தமது நாட்டின் நாணயத்திற்குப் பதிலாக வேறு ஒரு 'பண்டத்தை' செலாவணி ஊடகமாகப் பயன்படுத்துவதற்கு முற்படுவார்கள். ஜேர்மனியில் அதி-பணவீக்கத்தைத் தொடர்ந்து விலை ஒவ்வொரு நிமிடமும் 2 சதவீதத்தால் அதிகரித்ததன் காரணமாக, அந்நாட்டு நாணயமான ஜேர்மன் மார்க்கிற்கு பதிலாக சிகரட், சொக்கலேட் பார் அல்லது வெற்று போத்தல்களை பரிமாற்று ஊடகமாகப் பயன்படுத்த ஆரம்பித்தார்கள்.

---

1. 2008 செப்தெம்பர் மாத இறுதியில் சிம்பாப்வேயில் பணவீக்க வீதம் ஆண்டுக்கு 750,000,000,000 சதவீதத்தால் (அதாவது 750 பில்லியன் சதவீதத்தால்) அதிகரித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. உண்மையிலேயே இந்த பணவீக்க வேகத்தின் கீழ் பொதுமக்கள் இறப்புக்குள்ளாகின்ற விதத்தினை எடுத்துக்காட்டுவதற்குத் தகுந்த உவமானங்களை உருவாக்குவதற்கு எவராலும் முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதி-பணவீக்க நிலைமையொன்று உள்ளபோது சமூக நிலைமைகள் திரிபடைகின்றமை தொடர்பில் புனையப்பட்டுள்ள நகைப்புக்குரியதொரு கதை கீழே தரப்பட்டுள்ளது.

முதலாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் ஜேர்மனியில் தமது பெற்றோர்களின் வாரிசுரிமையாக குறிப்பிடத்தக்களவு செல்வத்திற்கு உரித்துடையவர்களாயிருந்த இரண்டு சகோதரர்களில் ஒரு சகோரதர் அவரது வாரிசுரிமையை, பயனுள்ள பாரியதொரு முதலீட்டுத் தொகுதியை கட்டியெழுப்புவதற்குப் பயன்படுத்தினார் என்பதோடு, அவர் புகழ்பெற்ற, செல்வம் மிக்க ஒரு முதலீட்டாளராக மாறினார். மற்றைய சகோதரர் ஒரு குடிகாரனாக இருந்தாரென்பதோடு, அவரது அனைத்துச் செல்வத்தையும் மதுபானத்திற்காகச் செலவழித்தார். ஆதலால், இச்சகோதரனின் வீடு வெற்று போத்தல்களால் நிறைந்திருந்தது. ஜேர்மனி அதி-பணவீக்கத்துக்கு உள்ளாகியதன் காரணமாக ஜேர்மன் மார்க் மதிப்பிழந்ததோடு, அதற்குப் பதிலாக 'வெற்று போத்தல்களை' பணமாகப் பயன்படுத்துதல் ஆரம்பமாகியது. அப்போது அறிவுபூர்வமான கொள்கையின் அடிப்படையில் செயலாற்றிய முதலாவது சகோதரனின் முதலீடுகளின் பெறுமதி பூச்சியம் வரை வீழ்ச்சியடைந்ததோடு, குடிகார சகோதரன், அவரது வெற்று போத்தல்கள் நாணயமாக மாறியதன் காரணமாக, ஓரிரவில் கோடீஸ்வரராக மாறினார்.

1980 இன் நடுப்பகுதியில் பொலீவியாவில் உருவாகிய பணவீக்கமும் வேறு விதத்திலான நகைப்புக்குரிய கதையொன்றுக்குக் காரணமாயமைந்துள்ளது. விலைகள் துரிதமாக அதிகரித்தமையின் காரணமாக, மிக எளிமையானதொரு கொடுக்கல் வாங்கலைக் கூட மேற்கொள்வதற்கு முன்னர் விலை தொடர்பான ஒரு இணக்கப்பாட்டிற்கு வருவது அவசியமாயிருந்தது. இக்கதையின்படி, தலைமுடி திருத்துவதற்கு முன்னர் நாவிதருடன் தலைமுடி திருத்துதலுக்கான விலை தொடர்பில் ஒரு இணக்கப்பாட்டிற்கு வருவார்கள். ஆயினும் நாவிதர் அரைவாசி தலைமுடியை வெட்டியதன் பின்னர், தலைமுடி வெட்டுவதை நிறுத்திவிட்டு மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தி உயர்வான ஒரு விலை இணக்கப்பாட்டிற்கு வருவார். அப்போது நிலவிய அதி-பணவீக்க நிலைமையினால் விலைகள் மேலும் அதிகரித்திருந்தமையே அதற்கான காரணமாயிருந்தது. அவ்வாறான பணவீக்க நிலைமையின் போது முன்னர் ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாடு தொடர்ந்தும் செல்லுபடியானதாக இருக்காது.

பணவீக்கத்தின் பொருளாதாரச் செலவினம்

மனிதர்களை சிரிக்க வைக்க மேற்படி கதைகள் பயன்படுத்தப்பட்ட போதிலும், அதன் மூலம் மிகப் பெறுமதிமிக்க பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. கட்டுப்படுத்த முடியாத பணவீக்க நிலைமையின் மூலம் உள்நாட்டு நாணயம் மீதுள்ள மக்களின் நம்பகத் தன்மை முறிவடையும் என்பதே முதலாவது பாடமாகும். இதன் மூலம் நாணயக் கட்டுப்பாடு தொடர்பில் அரசாங்கத்திற்குள்ள ஆற்றல் இழக்கப்படுவதோடு, பணவீக்கத்தைத் தவிர்க்கும் பொருட்டு நாணயக் கொள்கைகளைப் பயன்படுத்துவதற்கு அரசாங்கத்தால் இயலாமற்போகும். உயர் பணவீக்க நிலைமையின் கீழ் மக்கள் நீண்டகால உடன்படிக்கைகளுக்கு வருவதற்கு விரும்பமாட்டார்கள் என்பதும் அவர்கள் குறுகியகால உடன்படிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்துவார்கள் என்பதும் இரண்டாவது பாடமாகும். முன்னர் மாதாந்தம் வழங்கப்பட்ட சம்பளத்தை, முதலில் அரை மாத ரீதியிலும், அதன் பின்னர் வாராந்தம், நாளாந்தம் மற்றும் இறுதியில் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கு ஒரு முறையும் வழங்க நேரிடும். ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் ஒரு தடவை சம்பளம் வழங்க வேண்டியுள்ள, சேவை பெறுநருக்கு கேள்வியை நிறைவு செய்யும் பொருட்டு மிகப் பெரியதொரு செலவினத்தை நிச்சயமாக ஏற்க நேரிடும். இவ்வாறே ஏனைய அனைத்து உடன்படிக்கைகளும் குறுகியகால உடன்படிக்கைகளாக அமையும். மக்கள் குறுகியகால உடன்படிக்கைளையிட்டு மட்டுமே சிந்திப்பார்கள் என்பதோடு, எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்க மாட்டார்கள். இவ்வாறு மக்கள் நீண்டகால ரீதியில் சிந்தித்து தீர்மானம் எடுப்பதிலிருந்து தவிர்ந்திருப்பதன் காரணமாக நீண்டகால ரீதியிலான பொருளாதார வளர்ச்சி ஏற்படாது.

பணவீக்கம் பொருளாதாரத்தில் ஈடுசெய்ய முடியாத பல நட்டங்களை ஏற்படுத்தும்

முதலாவதாக, பணவீக்க ரீதியிலான நிலைமையினுள் ஏற்றுமதி ஊக்கமிழக்கச் செய்யப்பட்டு இறக்குமதி ஊக்குவிக்கப்படுவதன் ஊடாக 'வர்த்தக நிலுவை' எனக் குறிப்பிடப்படுகின்ற இறக்குமதிக்கும் ஏற்றுமதிக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்து, அதன் மூலம் சென்மதி நிலுவை மற்றும் செலாவணி வீதப் பிரச்சினைகள் உருவாகும்.

உள்நாட்டு விலைகள் உயர் மட்டத்தில் உள்ளபோது ஏற்றுமதியாளருக்கு வெளிநாட்டிற்குப் பண்டங்களை விற்பனை செய்யும் தேவை எழாது. உதாரணமாகக் குறிப்பிடுவதெனில், பணவீக்கம் அதிகரிக்கின்றபோது உள்நாட்டுச் சந்தையில் ஒரு தேங்காயின் விலை ரூபா 100 ஆகவும் சர்வதேச சந்தையில் ஒரு தேங்காயின் விலை ரூபா 50 ஆகவும் இருக்குமெனில், விலை அனுகூலத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு ஏற்றுமதியாளர் தமது உற்பத்திகளை உள்நாட்டுச் சந்தையிலேயே விற்பனை செய்வார். அதேபோன்று பணவீக்க நிலைமையினுள் உள்நாட்டுச் சந்தையை விட வெளிநாட்டுச் சந்தையில் பண்டங்களின் விலை குறைவாக இருப்பதனால் இறக்குமதி ஊக்குவிக்கப்படும். இவ்வாறானதொரு போக்கு ஏற்றுமதியின் மீது வரி விதிப்பதற்கும் இறக்குமதியின் மீது சலுகை வழங்குகின்ற நிலைமைக்கும் சமமானதாக இருக்கும்.

இரண்டாவதாக, பணவீக்கம் காரணமாக காணி, கட்டிடங்கள் ஆகிய சொத்துக்களினதும் பெறுமதிமிக்க உலோகங்களினதும் பெறுமதி அதிகரிக்கின்றது. ஆதலால் பணவீக்கத்திலிருந்து விடுபடுகின்ற ஓர் உபாய வழிமுறையாக, மக்கள் அவர்களது நிதியியல் சேமிப்புகளை, மேலே கூறப்பட்ட முதலீடுகளில் ஈடுபடுத்துவார்கள். ஆயினும், நீண்டகால நிலைத்திருக்கத்தக்க வளர்ச்சியின் பொருட்டு நிதியியல் சேமிப்புகள் அவசியமாயிருப்பினும், பணவீக்கம் அவ்வாறான சேமிப்புப் போக்குகள் நடைபெறுவதை செயலிழக்கச் செய்து நிறுத்திவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவதாக, பணவீக்கம் கடன்பட்டோரை போஷிக்கச் செய்து கடன் கொடுத்தோரை நலிவடையச் செய்யும். சந்தை வட்டி வீதம் பணவீக்கத்திற்கு ஏற்ற விதத்தில் அதிகரிக்காமையின் காரணமாக, உண்மை ரீதியில் எதிர்மறையான வட்டி நிலவுவதன் காரணத்தினாலேயே இவ்வாறு நடைபெறுகின்றது. அப்போது கடன்பட்டோர் நன்மையடைவார்கள் என்பதோடு, கடன் கொடுத்தோர் உண்மை ரீதியில் வறியவர்களாக மாறுவார்கள். இதன் காரணமாக கடன் வழங்குவதற்கு சேமிப்பாளர்கள் இல்லாதிருப்பதனால் பொருளாதாரத்தில் நிதி வளங்கள் தேய்வடையும்.

நான்காவதாக, பணவீக்கம் வளப் பகிர்வினை திரிபுபடுத்தும். சந்தை முறைக்கு ஏற்ப போட்டி ரீதியிலான பயன்பாடுகளிடையே வளப் பகிர்வின் பொருட்டு, ஒப்பீட்டு விலை, அதாவது ஒரு விலையின் மூலம் இன்னொரு விலை குறிப்பிடப்படுதல், மாற்றமடைதல் வேண்டும். உதாரணமாகக் கூறுவதெனில், கோவாவின் விலைக்கு ஒப்பீட்டளவில் கரட்டின் விலை அதிகரிக்குமாயின், கரட் உற்பத்தி செய்தல் கோவா உற்பத்தி செய்வதை விட இலாபகரமானதாக இருக்கும். ஆயினும், பொருளாதாரம் பணவீக்க ரீதியிலான நிலைமையினால் பாதிக்கப்படுகின்றபோது, அனைத்து விலைகளும் ஒரே தடவையில் அதிகரிப்பதன் காரணமாக, கரட் மற்றும் கோவா ஆகிய இரண்டும் ஒரு சமமான இலாபத்தைக் கொண்டிருப்பதைக் காணலாம். இவ்வாறானதொரு நிலைமையில் மேற்படி இரண்டு உற்பத்திகளுக்கும் மத்தியில் தீர்மானமொன்றை மேற்கொள்ள முடியாதவாறு உற்பத்தியாளர்கள் சிக்கலுக்கு உள்ளாவார்கள். ஆதலால் ஏதேனுமொரு பொருளாதாரம் பணவீக்கத்தின் மூலம் பாதிக்கப்பட்டுள்ளபோது, அப் பொருளாதாரத்தினுள் சாதகமான ஒப்பீட்டு விலை மாற்றமொன்று நடைபெறாது. அதற்குப் பதிலாக தனித்த விலை மாற்றங்கள் ஆரம்பமாவதோடு, அவ்வாறான விலை மாற்றங்கள், வளப் பகிர்விற்கான விலைச் சமிக்ஞைகளை வெளியிடாது.

ஐந்தாவதாக, தொடர்ச்சியான பணவீக்கம் குறிப்பாக, நிதி நிறுவனங்கள் உள்ளிட்ட கம்பனிகளின் ஐந்தொகையை திரிபு நிலைக்கு உள்ளாக்கும். கம்பனிகள் அவற்றின் இலாபத்தை பெயரளவுப் பெறுமதியில் வெளியிடுகின்ற போதிலும், உண்மைப் பெறுமதிகளில் வெளியிடுகின்றபோது, பணவீக்கத்தின் மூலம் இவ்விலாபத்தில் பெரும் பகுதி தேய்வடையும். இலாபத்தை பணவீக்கத்திற்கு சீராக்குகின்றபோது நிறுவனம் ஈட்டிய வருமானம் குறைவடையுமென்பதால், அவை சிறந்த முறையில் செயலாற்றவில்லை என்பது எடுத்துக்காட்டப்படும். உண்மையில் கூறுவதானால், நிறுவனங்களின் உண்மை நிலை கீழ் மட்டத்திற்கு, அதாவது பின்நோக்கித் தள்ளப்படும்.

ஆறாவதாக, பணவீக்கம் பலவீனமான பேரம்பேசும் ஆற்றலுடன் கூடிய பல்வேறு குழுக்களையும் கடுமையாகத் தாக்கும். குடும்பப் பெண்கள், மாணவர்கள், ஓய்வு பெற்றோர் மற்றும் பணவீக்கத்திற்கு ஏற்ப சம்பளம் சீர்செய்யப்படாத தொழிலாளர்கள் ஆகியோரை இவ்வாறு பாதிப்புக்குள்ளாகின்ற குழுவினராக அடையாளம் காணலாம். பணவீக்கம் நீண்டகால ரீதியில் மக்களுக்கு பண்டங்கள் மற்றும் பணிகளைக் கொள்வனவு செய்வதற்குள்ள பணத் தொகையுடன் நேரடியாகத் தொடர்புறுகின்றது. அத்தகைய பணத் தொகை அப்போதைக்குள்ள பண்டங்கள் மற்றும் பணிகளின் தொகையைத் தாண்டிச் செல்கின்ற போது, தேவையான கொடுக்கல் வாங்கலின் அளவுக்கு வசதிகளை வழங்குவதற்கு பொது விலை மட்டம் அதிகரித்தல் வேண்டும். ஆதலால், பொருளாதாரத்தில் பண்டங்கள் மற்றும் பணிகளின் உற்பத்தியின் அளவுக்கு நேரொத்த விதத்தில் மட்டுமே நாணயம் உற்பத்தி செய்யப்படுதல் வேண்டும் என்பதே பணவீக்கம் ஏற்படாதவாறு கடைப்பிடிக்க வேண்டிய கொள்கையாகும். இப் பெறுமதிமிக்க விதியை மீறுகின்ற எல்லாச் சந்தர்ப்பங்களிலும், எவ்வளவுதான் நியாயமான காரணத்தின் கீழாயினும், அது நீண்டகால ரீதியில் பொருளாதாரத்தினுள் பணவீக்கம் பிரவேசிப்பதற்கு வழி வகுக்கின்றது.

இவ்வாறான நிலைமைகளின் கீழ், நீண்டகால பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் பொருட்டு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கான, இன்னொருவருக்கு ஒப்படைக்க முடியாததொரு பொறுப்பு மத்திய வங்கிக்கு உரியதாயுள்ளது.

மத்திய வங்கியின் கடமைப் பொறுப்பு

பொருளாதாரத்தின் கொடுக்கல் வாங்கல்களின் அளவுக்கும் மொத்த உற்பத்திக்கும் நேரொத்த வகையில், நாணயத் தொகையைப் பேணிவரும் பொருட்டு மத்திய வங்கி நாணயக் கொள்கை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. மத்திய வங்கி அதன் நாளாந்த செயற்பாடுகளின் போது வழங்குகின்ற ஒதுக்குப் பணமெனக் குறிப்பிடப்படும் மூலங்களான விதை நாணயங்களைப் பயன்படுத்தி, வங்கி முறைமை பணம் படைத்தலை மேற்கொள்கின்றது. மத்திய வங்கியினால் கடைப்பிடிக்கப்படுகின்ற நாணயக் கொள்கை இரண்டு அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. அதில் முதலாவது, மத்திய வங்கியினாலேயே வழங்கப்படுகின்ற விதை நாணயத்தை நிருவகித்தலாகும் என்பதோடு, இரண்டாவது, அத்தகைய விதை நாணயத்தைப் பயன்படுத்தி வர்த்தக வங்கிகளால் படைக்கப்படுகின்ற ஒட்டுமொத்தமான பண நிரம்பலை நிருவகித்தலாகும்.

ஆயினும், நாணயக் கொள்கையின் இறுதி நோக்கம், பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான அதி-கேள்வியை நிருவகிப்பதன் ஊடாக பொது விலை மட்டத்தை நிலைத்திருக்கச் செய்து நீண்டகால பொருளாதார அபிவிருத்திக்கு உகந்ததான சுற்றாடலொன்றை உருவாக்குதலாகும். பணம் அதிகளவில் நிரம்பல் செய்யப்பட்டுள்ள போது பண நிரம்பலை வீழ்ச்சியடையச் செய்து அதனைத் தட்டுப்பாடான ஒரு பண்டமாக மாற்றி பணத்திற்கான செலவினம் எனப்படும் வட்டி வீதத்தை உயர் மட்டத்திற்கு அதிகரிப்பதன் ஊடாக மேற்படி நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள மத்திய வங்கியினால் முடியுமாயுள்ளது. மேலே குறிப்பிட்டுள்ள இரண்டு உபாய வழி முறைகளின் ஊடாகவும், தற்போது அனுபவித்து வருகின்ற உயர் மகிழ்ச்சியை அர்ப்பணித்து துன்புறுத்தும் விதத்தில் தமது அதிசெயற்பாட்டினை குறைத்துக்கொள்வதற்கு மக்களை நிர்ப்பந்தித்தலே நடைபெறுகின்றது. ஆதலால், மிகக் கடுமையான நாணயக் கொள்கை என்பது, துன்புறுத்துகின்ற பொருளாதார சீர்செய்தலுக்கு ஒட்டுமொத்தமான பொருளாதாரத்தையும் இட்டுச்செல்வதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கிகளின் கடமைப் பொறுப்பும் தனியார் துறையும்

மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படுகின்ற நாணயக் கொள்கை ரீதியிலான நடவடிக்கைகள் அனைத்தும் துன்புறுத்துபவையாக காணக்கூடும். நாணயக் கொள்கைகளின் மூலம் பொருளாதாரத்திற்கு துன்புறுத்துகின்றதான சீர்செய்தல்கள் நடைபெறுகின்ற போதிலும், பொருளாதாரத்தின் அனைவரினதும் நன்மையைக் கருதி அவ்வாறான சீர்செய்தல்களை மேற்கொள்ளுதல் அவசியமாகின்றது. இவ்வாறு துன்புறுகின்ற நிலைக்கு உள்ளாகின்றவர்களிடையே, துன்புறுத்துகின்றதான சீர்செய்தல்களின் நன்மையான பெறுபேறுகளைப் பற்றி தெளிவானதொரு புரிந்துணர்வு இருத்தல் வேண்டுமென்பதோடு, அதன் பொருட்டு அவர்கள் நோயினை முற்றாகக் குணப்படுத்துவதற்குத் தேவையான கசப்பான மருந்தினைப் பயன்படுத்தத் தயாராயிருத்தல் வேண்டும்.

மத்திய வங்கி ஏனைய வங்கிகளின் ஊடாக நாணயக் கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதால், அத்தகைய நாணயக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் பொருட்டு ஏனைய வங்கிகள் மீது புதிய பொறுப்புகள் ஒப்படைக்கப்படும். இப் புதிய பொறுப்புகளைத் தொடர்ந்து, மத்திய வங்கியின் நாணயக் கொள்கைகள் அவர்களது நன்மைக்கே காரணமாக அமையுமென்பதால் வங்கிகள் அவற்றிற்கு மதிப்பளித்தல் வேண்டும். மத்திய வங்கி வட்டி வீதத்தை உயர்த்தி கடன் தொகைகளை மட்டுப்படுத்துகின்றபோது வங்கிகளிலிருந்து மத்திய வங்கி எதிர்பார்க்கின்ற இலக்குகளைத் தாண்டிய விதத்திலான பெறுபேறுகளைப் பெறுவதற்கு அவை நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இறுதியில் பணவீக்க நிலைமையற்ற பொருளாதாரத்தின் நலன்பெறுனர்கள் இவ் வங்கிகளாகும் என்பதால், நாணயக் கொள்கை இலக்குகளை அடையும் பொருட்டு வங்கிகள் முழுமையான ஒத்துழைப்பையும் அர்ப்பணிப்பையும் வழங்குதல் வேண்டும்.

நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் தனியார் துறைக்கும் இதனையொத்த ஒரு பொறுப்பு உள்ளது. பணவீக்க ரீதியிலான நிலைமைக்குக் காரணமாக அமைகின்ற அனைத்துக் காரணிகளையும் மத்திய வங்கி பொருளாதாரத்திலிருந்து அகற்றுதல் வேண்டும். அவ்வாறு செய்கின்றபோது பல்வேறு துன்பம் விளைவிக்கின்றதும் எதிர்பாராததுமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மத்திய வங்கிக்கு நேரிடுகின்றது. ஆயினும் அவ்வாறான நடவடிக்கைகள் பொருளாதாரத்தின் நன்மையையும், நீண்டகால நலனையும் முன்னிட்டே மேற்கொள்ளப்படும். பொருளாதாரத்திற்கு பணவீக்கத்தின் மூலம் தொடர்ச்சியாகத் துன்புறுவதற்கு இடமளிப்பதாயிருப்பின், அதன் மூலம் கடுமையாகப் பாதிக்கப்படுவது தனியார் துறையாகும். பணவீக்க ரீதியிலான நிலைமையினுள் நீண்டகால திட்டம் வகுப்பவர்கள் மறைந்து அனைவரும் நொடிப்பொழுதிலான நிகழ்வின் பொருட்டு தீர்மானம் மேற்கொள்கின்ற முகாமையாளர்களாக மாறிவிடுவார்கள். ஊழியர்களது சம்பளத்தை அதிகரிப்பதற்காக பல்வேறான வேண்டுகோள்கள், நெருக்கடிகளுக்கு முகம்கொடுப்பதற்கு தனியார்துறைக்கு நேரிடும். தனியார் துறையின் உண்மை இலாபத் தொகை குறைவடையும். ஆதலால், நாணயக் கொள்கை நடவடிக்கைகளை மிக வினைத்திறன்மிக்க விதத்தில் செயற்படுத்துவதற்காக தனியார் துறை மத்திய வங்கிக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குதல் வேண்டும். தனியார் துறையின் அனைவரும் இந்நிலைமையை அறிந்திருத்தல் மிகவும் முக்கியமானதாகும்.

பணவீக்கப் போராட்டத்திற்கான அரச பங்களிப்பு

பொதுவாக, அரசாங்கங்களே பணவீக்கத்திற்கான பிரதானமான காரணமாகுமென குறைகூறுதலுக்கு உள்ளாகின்றன. இதில், அரசாங்கம் உயர் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையொன்றைப் பேணிவருவதே பணவீக்கத்திற்குக் காரணமாகுமென குற்றம் சுமத்தப்படுகின்றது. இவ்வாறு அரசாங்கத்திற்கு எதிராக விடுக்கப்படுகின்ற மேற்படி விமர்சனங்கள் முற்றும் உண்மையானதல்ல. பணவீக்கத்துக்குக் காரணமாயிருப்பது, வரவு செலவுப் பற்றாக்குறையை விட, வரவு செலவுப் பற்றாக்குறையை பணவீக்க ரீதியிலான வழிமுறைகளின் மூலம் தீர்ப்பதேயாகும். அதாவது, வரவு செலவுப் பற்றாக்குறையைத் தீர்க்கும் பொருட்டு மத்திய வங்கி மற்றும் வர்த்தக வங்கிகள் ஆகிய நிறுவனங்கள் உள்ளடங்கிய வங்கித் துறையிலிருந்து கடன் பெறுதலாகும். அரச துறையின் பற்றாக்குறையைப் போன்றே தனியார் துறையின் பற்றாக்குறையும் பண நிரம்பல் அதிகரிப்பதற்குப் பங்களிப்புச் செய்வதோடு, அதன் மூலம் பணவீக்க ரீதியிலான எதிர்விளைவுகள் பொருளாதாரத்தினுள் உருவாக்கப்படும். ஆதலால், பணவீக்க நிலைமைகளுக்கான குற்றச்சாட்டுகள் அரச, தனியார் ஆகிய இரு துறைகளுக்கும் விடுக்கப்படுதல் வேண்டும். வரவு செலவுப் பற்றாக்குறையைத் தீர்க்கும் பொருட்டு வங்கித் துறையிலிருந்து நிதியங்களைப் பெறுதல் எல்லா அரசாங்கங்களுக்கும் இலகுவானதொரு விடயமாக உள்ளது. அத்தகைய நிதியங்களைப் பெற்றுக்கொள்ளுதல் மிக இலகுவாக இருப்பதோடு, குறைந்த செலவினத்தில் மேற்கொள்ள முடியுமாயிருப்பதே அதற்கான காரணமாகும். ஆயினும் வங்கி நிதியங்களின் மிகைப்பயன்பாடு மேலதிக பணம் படைத்தலுக்குக் காரணமாயமைவதோடு, அதன் மூலம் பணவீக்க ரீதியிலான நிலைமை உருவாகும். அவ்வாறானதொரு நிலைமையினுள் அரசாங்கத்திற்குப் பொறுப்புடன் செயலாற்ற நேரிடும். பொறுப்பற்ற அரச வரவு செலவுத் திட்ட கொள்கைகளின் பெறுபேறாக பணவீக்க ரீதியிலான நிலைமை வளர்ச்சியடையுமெனில், அதன் காரணமாக பாதிக்கப்படுகின்ற பிரதானமான நிறுவனமாக இருப்பதும் அரசாங்கமேயாகும். வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை நிதியிடும் பொருட்டு வங்கிகளிலிருந்து கடன் பெறுவதற்கு அரசாங்கம் காட்டுகின்ற விருப்பமானது, மூடி திறக்கப்பட்டுள்ள இனிப்புப் பண்டங்கள் போத்தலில் கையை விடுவதற்கு குழந்தை காட்டுகின்ற அளவு கடந்த ஆசைக்குச் சமமாகும். இவ்வாறானதொரு சூழலில் மத்திய வங்கியின் பொறுப்பாக இருக்க வேண்டியது, குழந்தைக்கு அதன் விருப்பப்படி இனிப்புப் பண்டங்களை எடுப்பதற்கு முடியாதவாறு பாத்திரத்தை இறுக மூடிவிடுவதாகும். இது பாராட்டுவதற்குரியதொரு உபாய வழிமுறையாக இல்லாதிருப்பினும், உலகிலுள்ள அனைத்து மத்திய வங்கிகளும் பொருளாதாரத்தின் நன்மையைக் கருதி மேற்படி இனிப்புப் பண்டங்கள் போத்தலை கடுமையான கட்டுப்பாட்டின் கீழ் மூடி வைப்பதில் கவனம் செலுத்தியுள்ளன. ❍

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் படைக்கும் மந்திரம் - பொன்சி முறை

ருவினி ரத்நாயக்க

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

இருபத்தி ஒரு வயதுடைய இத்தாலிய இளைஞர் ஒருவரான சால்ஸ் பொன்சி (Charles Ponzi) 1903 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் காலடி எடுத்து வைக்கின்றபோது அவரது பக்கட்டில் இரண்டு டொலர் ஐம்பது சதம் மாத்திரமே இருந்தது. அமெரிக்காவுக்கு வந்தது முதல் ஒருசில வருடங்கள் ஒரு உணவுச் சாலையில் பீங்கான்களை கழுவித் துப்புரவு செய்கின்றவராகவும், வேட்டராகவும் பணிபுரிந்த பொன்சி களவாடியதன் காரணமாக தொழிலிருந்து நீக்கப்பட்டார். அதன் பின்னர் 1907 இல் கனடாவின் மொன்றியல் நகரத்திற்குச் சென்ற அவர் ஒரு வங்கியில் தொழிலொன்றைத் தேடிக்கொண்டார். அங்கு ஒரு போலி காசோலையை வரைந்ததன் காரணமாக குற்றவாளியாக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். சிறையிலிருந்து விடுதலையான உடனேயே பொன்சி மீண்டும் அமெரிக்காவின் பொஸ்ரன் நகரத்திற்கு வந்து சேர்ந்தார். அங்கு அவர் ரோஸ் நிக்கோ எனும் இத்தாலிய யுவதியைச் சந்தித்தார். இவர்கள் 1918 இல் திருமணம் முடித்தனர். திருமணத்தின் பின்னர் பொன்சி பல தொழில்களில் ஈடுபட்டார்.

1919 ஆகஸ்ட் மாதத்தில் பொஸ்ரன் நகரத்தில் வசித்த சால்ஸ் பொன்சிக்கு இத்தாலியிலுள்ள அவரது நண்பர் ஒருவரிடமிருந்து சர்வதேச தபால் பதில் கூப்பன் ஒன்று கிடைத்தது. இக்கூப்பன் சர்வதேச ரீதியில் சிறிய அளவிலான கொடுக்கல் வாங்கல்களின் பொருட்டே தயாரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறான கூப்பன்கள் கிடைக்கப்பெற்றவர்களுக்கு அவற்றைத் தமது பிரதேசத்திலுள்ள தபால் அலுவலகங்களில் முத்திரைகளுக்குப் பரிமாற்றிக்கொள்ள முடியுமாயிருந்தது. தமக்கு இத்தாலியிலிருந்து கிடைத்த கூப்பன் ஸ்பெயினில் கொள்வனவு செய்யப்பட்ட ஒன்றென்பதை பொன்சி அவதானித்தார். அக்கூப்பனின் விலை ஸ்பெயினில் மிகக் குறைவாயுள்ளதே அதற்கான காரணம் என்பதை பொன்சி கண்டுபிடித்தார். அப்போது இரு நாடுகளுக்கும் இடையிலிருந்த செலாவணி வீதத்திற்கு ஏற்ப, ஸ்பெயினில் மேற்படி சர்வதேச தபால் பதில் கூப்பனின் விலையானது, அதை வழங்குவதன் மூலம் ஐக்கிய அமெரிக்காவின் தபால் அலுவலகமொன்றிலிருந்து பெற முடியுமான முத்திரைகளின் பெறுமதியில் ஆறில் ஒரு பங்காக மட்டுமே இருந்தது. இது இலாபம் ஈட்டுவதற்குத் திறக்கப்பட்ட அதிசயமானதொரு வழியாகும் என்பதை பொன்சி புரிந்துகொண்டார்.

டொலர்களை பெசோவாக மாற்றி, அவற்றின் மூலம் ஸ்பெயினிலிருந்து சர்வதேச தபால் பதில் கூப்பன்களைக் கொள்வனவு செய்து அவற்றை ஐக்கிய அமெரிக்காவுக்கு எடுத்துவந்து கூப்பன்களுக்குப் பதிலாக ஐக்கிய அமெரிக்க முத்திரைகளைப் பெற்று அவற்றை விற்பனை செய்து டொலர் ஈட்டுதல் பொன்சியினால் அடையாளம் காணப்பட்ட பணம் படைக்கின்ற முறையாக இருந்தது. பின்வரும் கட்டங்கள் இச் செயற்பாட்டினை விளக்குகின்றன.

1. ஐக்கிய அமெரிக்க முதலீட்டாளர்களிடமிருந்து பணத்தைச் சேகரித்து அவற்றை ஸ்பெயின் பெசோவாக மாற்றுதல்

2. அத்தகைய பெசோக்களைப் பயன்படுத்தி ஸ்பெயினில் சர்வதேச தபால் பதில் கூப்பன்களைக் கொள்வனவு செய்தல்

3. அத்தகைய கூப்பன்களை ஐக்கிய அமெரிக்காவுக்கு எடுத்துவந்து அவற்றிற்குப் பதிலாக ஐக்கிய அமெரிக்க முத்திரைகளைப் பெற்றுக்கொள்ளல்

4. அந்த முத்திரைகளை விற்பனை செய்து டொலர்களைப் பெற்றுக்கொள்ளல்

இது மிக வேகமாக, மட்டுப்பாடுகளின்றி பணம் ஈட்டக்கூடிய ஒரு முறையாகும் என்பதை பொன்சி அவதானித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு நாடுகளிலும் சர்வதேச தபால் பதில் கூப்பன் விலைகளிலுள்ள முரண்பாடுகளை அடையாளம் கண்டு அவற்றை திருத்துகின்றபோது பொன்சி கண்டுபிடித்த இலாபம் ஈட்டும் வழிகள் மூடப்படுதல் மேற்படி முறையிலுள்ள பிரச்சினையாகும்.

இலாபம் ஈட்டுகின்ற வழிகள் திறந்திருப்பதை அவதானித்த பொன்சி உடனடியாகச் செயற்பட்டார். அவர் Security and Exchange Company எனும் பெயரில் ஒரு கம்பனியைத் தாபித்தார். இதற்கு பல காலங்களுக்குப் பின்னர் 1930 ஆம் ஆண்டுகளிலேயே பங்குத் தொகுதிகள் பரிமாற்ற ஆணைக்குழு (Security and Exchange Commission) தாபிக்கப்பட்டது. ஆதலால் பொன்சியின் கம்பனி ஒரு அரச நிறுவனத்தின் பெயரைப் பயன்படுத்தி மக்களை ஏமாற்றுவதற்கு உருவாக்கப்பட்ட ஒன்றாகுமெனக் குறிப்பிட முடியாது.

தொன்நூறு நாட்களில் 40 சதவீத பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகக் கூறப்படுகின்ற பத்திரங்களை பொன்சி முதலீட்டாளர்களிடையே விநியோகித்தார். அப்போதிருந்த சராசரி வட்டி வீதம் ஆண்டிற்கு 5 சதவீதமாயிருந்ததால் இது மிகவும் கவர்ச்சிகரமான முதலீட்டு வாய்ப்பாக மாறியது. பொன்சி ஆரம்பத்தில் பொஸ்ரன் நகரத்தின் வடக்குப் பிரதேசத்திலிருந்த புலம்பெயர்ந்த மக்களையே இலக்காகக் கொண்டார். பொன்சியும் அதே சமூகத்தைச் சேர்ந்த ஒருவராக இருந்தார்.

சிறிய முதலீடுகளைப் பொறுப்பேற்று, பொன்சியின் பணம் படைக்கும் கம்பனி 1920 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் கடமையை ஆரம்பித்தது. தொன்நூறு நாட்கள் முதலீட்டுக்கு 100 சதவீதம் என்ற வகையிலும் நாற்பத்தி ஐந்து நாட்களுக்கான முதலீட்டுக்கு 50 சதவீதம் என்றவாறும் பிரதிபலன்களை அதிகரிக்கச் செய்வதற்கு பொன்சி நடவடிக்கை எடுத்தார். பெப்ருவரி மாதமளவில் பொன்சியின்பால் ஓர் ஆற்றைப் போன்று பணம் பெருக்கெடுத்து வந்தது. இவ்வாறு 1920 பெப்ருவரி மாதமளவில் ஐயாயிரம் ஐக்கிய அமெரிக்க டொலர்களை ஈட்டுவதற்கு பொன்சியால் இயலுமாயிருந்தது. அதே ஆண்டு மார்ச் மாதமளவில் அவரது வருவாய் முப்பதாயிரம் டொலர்களாக இருந்தது. மேலும் இரண்டு மாதங்கள் செல்கின்ற போது இது நான்கு இலட்சத்து இருபதாயிரம் டொலர்கள் வரை அதிகரித்தது. 1920 ஜூலை மாதமளவில் கோடீஸ்வரராக மாறுவதற்கு பொன்சியால் முடியுமாயிருந்தது. பொன்சி முறையின் ஆரம்பம் இவ்வாறு துவங்கியது.

தொடர்ச்சியாகப் பெருக்கெடுத்து வந்த பணத் தொகையைச் சேகரிக்கும் பொருட்டு அவர் எழுது வினைஞர்கள் ஆறு பேரின் சேவையைப் பெற்றுக்கொண்டார். சேகரிக்கப்பட்ட பணத்தை பொதுச் சேமிப்பு வங்கியொன்றில் வைப்பிலிடுவதற்கு பொன்சி நடவடிக்கை எடுத்தார். பொதுச் சேமிப்பு வங்கி என்பது வைப்பாளர்களுக்கு அதன் பங்குகள் உரித்தாகின்ற விதத்திலான கடன் சங்கம் ஒன்றைப் போன்றதாகும். மிக விரைவாக வங்கியின் பிரதான வைப்பாளராக/ பங்குரிமையாளராக மாறுவதற்கு பொன்சியால் இயலுமாயிருந்தது. இதன் பெறுபேறாக அவ்வங்கியின் தலைவராக இவர் தெரிவு செய்யப்பட்டார்.

முதலீட்டாளர்களுக்கு உயர்ந்தளவு பிரதிபலன்கள் வழங்கப்படுமென பொன்சி முறையில் வாக்குறுதியளிக்கப் படுகின்றது. ஆதலால் மக்கள் அவ்வாறான முறைகளில் முதலீடு செய்வதற்கு முற்படுவார்கள். கிடைக்கின்ற உயர் பிரதிபலன்களின் பேரிலுள்ள பேராசையினால் மக்கள் அதைச் சுற்றிலும் திரள்வதன் காரணமாக அவ்வாறான முறைகள் மிக விரைவாகப் பிரபல்யமடைகின்றன. மென்மேலும் முதலீட்டாளர்கள் அதன்பால் ஈர்க்கப்படுவார்கள். இதற்கிணங்க ஈட்டப்படுகின்ற பணத்தில் ஆரம்ப முதலீட்டாளர்களுக்கு பிரதிபலன்கள் வழங்கப்படும். முதலீட்டிலிருந்து பிரதிபலன்களைப் பெற்றவர்கள் மீண்டும் அப் பணத் தொகையை அதிலேயே முதலீடு செய்தல், மேற்படி முறை வெற்றிகரமானதென வெளித்தோற்றத்தில் தென்படுவதற்கு ஒரு காரணமாயுள்ளது. இதில் முதலீட்டாளர்களுக்கு உண்மையிலேயே மீண்டும் பணம் இடுவதற்கான தேவை எழாதென்பதோடு, தாம் அதில் முதலீடு செய்வதாக உடன்படிக்கை செய்துகொள்ளல் போதுமானதாகும். இதற்கிணங்க புதிய முதலீட்டின் மூலம் பணம் கிடைப்பதனாலும், ஆரம்ப முதலீட்டுத் தொகைகள் அவ்வாறே இருப்பதனாலும் பணப் பற்றாக்குறை ஏற்படாது. ஆயினும் மோசடியான விதத்தில் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற ஒருவர் திடீரென தம்மிடமுள்ள பணத் தொகைகளை எடுத்துக்கொண்டு மறைந்து விடலாம். இன்றேல் பிரதிபலன்களை வழங்குவதற்குப் போதியளவு பணம் இன்மையால் முதலீட்டுச் செயற்பாட்டின் மூலமே அது முறிவடைதலுக்கு உள்ளாகலாம். அவ்வாறின்றேல், சட்ட நிறுவனங்கள் இதனை சட்ட விரோத நிதித் தொழிற்பாடாக அடையாளம்கண்டு அதனைத் தொடர்ந்து நடத்தி வருவதற்கு அனுமதியளிக்காதிருப்பதன் காரணமாக மேற்படி முறை முறிவடைதலுக்கு உள்ளாகலாம்.

பெருமளவு பணத்தை கையாண்டு, சொத்துக்களை உடைமையாக்கிக் கொண்டு மிக சுகபோகமானதொரு வாழ்க்கையையும் மிகவும் கடமைப் பழு மிக்கதொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையையும் நடத்துவதற்கு பொன்சி ஆரம்பித்தார். அவர் எவ்வளவு தூரத்திற்கு கடமைப் பழு மிக்கவராக மாறினாரென்றால், சர்வதேச தபால் பதில் கூப்பன்களின் விலை முரண்பாட்டிற்கு என்ன நடக்கின்றது என்பதைக் கூட ஆராய்ந்து பார்ப்பதற்கு அவருக்கு நேரம் கிடைக்கவில்லை. உண்மையிலேயே அப்போது அவரது வங்கி வைப்புகளுக்கு கிடைத்த 5 சதவீத வருடாந்த வட்டி மட்டுமே அவர் பெற்றுவந்த ஒரேயொரு இலாபமாக இருந்தது.

மேற்படி முறையை நிதியியல் ரீதியில் பேணி வருவதற்கு முடியாதென்பதை விளக்கி 1920 ஜுலை மாதத்தில் (Boston Post) பத்திரிகை கட்டுரையொன்றை வெளியிட்டது. பொன்சியினால் வாக்குறுதியளிக்கப்பட்ட பிரதிபலன்களை நிதியிடுவதற்கு போதியளவான சர்வதேச தபால் பதில் கூப்பன்கள் விற்பனை செய்யப்படவில்லையென்பது அதன் மூலம் விளக்கப்பட்டது.

பொன்சியின் கெட்ட காலம் உருவாகத் தொடங்கியது. அவரிடம் வந்த ஒருசில முதலீட்டாளர்கள் தமது பணத்தை மீளத் தரும்படி வேண்டுகோள் விடுத்தனர். அப்போது தாம் சொந்தமாக்கிக் கொண்டிருந்த Hanover Trust வங்கியின் காசோலைகளின் மூலம் அவர்களது பணத்தைச் செலுத்துவதற்கு பொன்சி நடவடிக்கை எடுத்தார். எவ்வாறாயினும், Boston Post பத்திரிகையின் கட்டுரை தமது தொழிலின் இயல்பை வெளிப்படுத்துவதற்கு உரியதொன்றல்ல என்றும் தாம் வெளிப்படுத்தாத பணம் ஈட்டுகின்ற பல முறைகள் தம் வசம் உள்ளதெனவும் கூறி பெரும்பாலானோரை திருப்திப்படுத்துவதற்கு பொன்சியால் இயலுமாக இருந்தது. தாம் பணம் ஈட்டுவது சர்வதேச தபால் பதில் கூப்பன் விற்பனையின் மூலம் மட்டுமல்ல என அவர் அறிவிக்கத் தொடங்கினார். பொன்சியின் விளக்கமளித்தல் எவ்வளவு தூரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பது, அப்போதிருந்த நிலைமையினுள் அவரது கம்பனி முறிவடைதலுக்கு உள்ளாகாது, இரண்டு இலட்சம் டொலர் தேறிய முதலீடு இக்காலகட்டத்தினுள் கிடைத்திருப்பதைக் கொண்டு தெளிவாகின்றது.

கணக்குகள் கணக்காய்வு செய்யப்படும் வரை பொன்சியின் கம்பனிக்கு புதிய முதலீடுகளைப் பெற்றுக்கொள்ளுதல் இடைநிறுத்தப்பட வேண்டுமென பொஸ்ரன் நகர மாவட்ட சட்ட அதிகாரி கட்டளையிட்டதைத் தொடர்ந்து அதன் செயற்பாடுகளுக்கு மிகவும் பலத்ததொரு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, தமது பணத்தை மீளத் தரும்படி கோரி முதலீட்டாளர்கள் பொன்சியின் கம்பனிக்கு வரத் தொடங்கினர். பொன்சியின் விளம்பரதாரியாகச் செயலாற்றிய நபர் வெளிப்படுத்திய விடயங்களின் அடிப்படையில் Boston Post பத்திரிகை மேலுமொரு கட்டுரையை வெளியிட்டது. பொன்சி கோடிக்கணக்கான டொலர்கள் கடன்பட்டுள்ளதாக இந்நபர் கூறினார். இவற்றிற்கு மேலதிகமாக, 45 நாட்களில் 50 சதவீதத்திற்கும் அதிகமான பிரதிபலன்களை பெற்றுக்கொள்ள முடியுமென ஏனையோருக்குக் கூறுகின்ற பொன்சி தமது பணத்தை ஆண்டுக்கு 5 சதவீத பிரதிபலனை மட்டுமே தருகின்ற வங்கிக் கணக்குகளில் வைப்பிலிட்டுள்ளதற்கான காரணம் என்னவென்று இவர் கேள்வியெழுப்பினார்.



பொன்சிக்கு மரத் தளபாடங்களை வழங்கிய தொழிலதிபர் ஒருவர் தமக்குக் கிடைக்க வேண்டிய பணத்தொகையொன்று கிடைக்காததன் அடிப்படையில் பொன்சிக்கு எதிராக வழக்குத் தொடுத்தார். இவ்வளவு செல்வந்தராக உள்ள ஒருவர் மிகவும் சிறியதொரு தொகையைச் செலுத்தாதிருப்பதேன் என்ற விடயம் மக்களின் சந்தேகத்தைத் தூண்டுவதற்குக் காரணமாக அமைந்தது.

இதன் பின்னரே Boston Post பத்திரிகை பொன்சியின் கடந்தகால தகவல்களைக் கண்டறிவதற்கு ஆரம்பித்தது. அவ்வாறு கண்டறியப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட்ட இவரது ஆரம்பகாலத் தகவல்களையே இக்கட்டுரையின் ஆரம்பத்தில் வெளியிட்டுள்ளோம்.

பத்திரிகைக் கட்டுரைகள் மற்றும் கம்பனியின் கணக்காய்வு அறிக்கைகளின் காரணமாக பொன்சியின் வேலைத்திட்டத்தின் போலியான தன்மை அனைவருக்கும் தெளிவாகியது. பொன்சி தலைவராயிருந்த Hanover Trust எனப்படுகின்ற பொதுச் சேமிப்பு வங்கியை மசசூசெட்ஸ் அரச வங்கிகள் ஆணைக்குழு மூடிவிட்டது. ஆயினும் அதற்கு முன்னர் தம்முடைய கம்பனிக்கு மீண்டும் உயிரூட்டுகின்ற எண்ணத்தில், வங்கிக்கு உரியதாயிருந்த ஒரு மில்லியன் டொலரை பொஸ்ரன் நகர குதிரைப் பந்தயப் போட்டித் திடலுக்கு எடுத்துச் சென்று பந்தயம் பிடிப்பதில் பொன்சி ஈடுபட்டார்.

களவு மற்றும் தபால் கூப்பன் மூலம் செய்த மோசடி தொடர்பான குற்றச்சாட்டுக்கு பொன்சி ஆளானபோது, "சிறிய மனிதர்களுக்கு" அதிக பிரதிபலனை ஈட்டிக்கொள்வதற்கான வாய்ப்பைப் பெற்றுக்கொடுத்த "தவறுக்கு" பணக்காரர்கள் தமக்கு தண்டனை வழங்குவதற்கு முயற்சிப்பதன் காரணமாக இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்துக் கஷ்டங்களும் உருவாகியதென பொன்சி பொதுமக்களுக்குக் கூறினார். குற்றச்சாட்டுகள் தொடர்பில் குற்றவாளியாகக் காணப்பட்ட பொன்சி சிறைக்கு அனுப்பப்பட்டார். வாய்மூல உறுதிப்பிரமாணத்தின் பேரில் மூன்றரை வருடங்களுக்குப் பின்னர் இவர் விடுவிக்கப்பட்டார்.

எவ்வாறாயினும் உறுதிப்பிரமாணத்தின் பேரில் விடுதலை செய்யப்பட்டிருந்த பொன்சி மீண்டும் கைது செய்யப்பட்டார். அப்போது அவர் சிறையிலிருந்து தப்பிச் சென்று புளோரிடாவில் வேறொரு பெயரில் தோன்றினார். அங்கு அவர் அறுபது நாட்களில் 200 சதவீத பிரதிபலன்களைப் பெற்றுத் தருவதாகக் கூறி ஆதனங்கள் விற்பனை மோசடியொன்றை ஆரம்பித்தமையின் காரணமாக மீண்டும் கைது செய்யப்பட்டார். அதிலிருந்து இவர் மீண்டும் தப்பிச் சென்ற போதிலும் மீண்டும் கைது செய்யப்பட்டு மசசூசெட்ஸுக்கு கொண்டு வரப்பட்டார். அங்கு ஏழு வருட கால சிறைத் தண்டனையை அனுபவித்த பொன்சி குறிப்பிட்ட காலம் முடிவடைந்ததும் இத்தாலிக்கு நாடுகடத்தப்பட்டார். அங்கு இத்தாலிய அலிதாலியா விமானக் கம்பனியில் ஒரு தொழிலைப் பெறுவதற்கு பொன்சியால் முடியுமாயிருந்தது. ஆயினும் அவருக்கு பிரேசிலின் ரியோ டி ஜெனைரோ நகரத்திலிருந்த அலிதாலியா அலுவலகத்திலேயே சேவையாற்றுவதற்கு நேரிட்டது. இரண்டாவது உலக மகா யுத்த காலத்தில் அலிதாலியா கம்பனி பிரேசிலில் செயலாற்றுவதை இடைநிறுத்தியமையினால் பொன்சி அந்தத் தொழிலையும் இழந்தார். அதன் பின்னர் ஆங்கிலம் கற்பித்தல் போன்ற பல்வேறு தொழில்களில் ஈடுபடுவதற்கு பொன்சி முயற்சித்த போதிலும் அவை அனைத்தும் பயனற்றவையாக அமைந்தன. இறுதியில் இவர் ரியோ டி ஜெனைரோ நகரத்தில் புண்ணிய உதவியின் கீழ் இயங்குகின்ற ஒரு ஆஸ்பத்திரியில் மரணமடைந்தார்.

மேற்படி முறையின் ஸ்தாபகரான சால்ஸ் பொன்சி இதனூடாக எவ்வளவு தொகைப் பணத்தை ஈட்டியுள்ளார் என்பதைக் கண்டறிவதற்கு அமெரிக்க அரசாங்கம் ஆர்வம் காட்டியது. அவர்களால் ஒருபோதும் அதனைக் கண்டறிய முடியவில்லை. அமெரிக்க மக்களது பல மில்லியன் டொலர் பணம் இந்த முறைகேடான முதலீட்டு முறையின் ஊடாக சால்ஸ் பொன்சியின் கைகளைச் சென்றடைந்தது என்ற ஒரேயொரு விடயத்தை மட்டுமே அவர்களால் கூற முடியுமாயிருந்தது.

ஒரு வறியவராக பொன்சி இறந்த போதிலும், அவர் தமது பெயரை உலகில் மீத வைத்துச் சென்றுவிட்டார். ஆயினும் அது ஒரு நற்பெயராகவல்ல. அதிகளவு பிரதிபலன்களை பெற்றுத் தருவதாகக் கூறி மக்களிடமிருந்து முதலீடுகளை (வைப்புகளை) பெற்றுக்கொள்ளும் இவ்வாறான போலியான செயற்பாடுகளை பொன்சி முறை என தற்போது குறிப்பிடுகிறோம். எமது நாட்டில் உருவாகிய 'சக்வித்தி' மற்றும் 'தண்டுவம்' ஆகியோரை பொன்சியின் விதிமுறையை மீண்டும் செயற்படுத்தியர்கள் என்றே குறிப்பிட வேண்டியுள்ளது.

பொன்சி முறையில் பணத்தை முதலீடு செய்கின்றவர்களுக்கு ஆரம்பத்தில் பெருமளவு பிரதிபலன் கிடைத்தல் அவர்கள் அதில் பேராசையுடன் ஈடுபடுவதற்கு காரணமாயமைகின்றது. எமது நாட்டில் 'சக்வித்தி' பணம் பெற்றது, அதிக பிரதிபலன்களைப் பெற்றுத் தருவதாகக் கூறிய அவரது 'தொழில்துறை' நடவடிக்கைகளுக்காகும். அவர் அத்தகைய முதலீடுகளுக்காக மாதத்திற்கு 5 சதவீதத்தை பிரதிபலனாக வழங்குவதற்கு வாக்குறுதியளித்தார். இது அவர் தமது 'தொழில்துறை' நடவடிக்கைகளுக்காக ஆண்டுக்கு 60 சதவீத வட்டிக்கு கடன் பெறுவதற்குச் சமமாகும். சந்தையில் கடனுக்கான வட்டி ஆண்டுக்கு 25 சதவீதத்திற்கும் குறைந்த மட்டத்தில் இருந்ததொரு சந்தர்ப்பத்திலேயே இவர் இதனைச் செய்தார். சந்தையில் ஒப்பீட்டளவில் குறைந்த வட்டிக்கு பணம் கிடைக்கின்றபோது இவர் அதைப் போன்று இரண்டு மடங்கிற்கும் அதிகமாக வழங்கி 'முதலீட்டாளர்களிடமிருந்து' பணம் பெறுவதற்கு முற்பட்டது ஏன் என ஒருவரும் கேள்வி எழுப்பவில்லை.

மேற்படி போலியான முதலீட்டு முறையின் மூலம் அநேகமானோரின் பணம் விழுங்கப்படுவது பொன்சி, சக்வித்தி, தண்டுவம் ஆகியோரின் வீரதீரச் செயல்களினால் மட்டுமல்ல என்பது இதன் மூலம் தெளிவாகின்றது. பொன்சி முறைகள் மூலம் வழங்குவதாக வாக்குறுதியளிக்கப்படுகின்ற அதிகளவிலான பிரதிபலன்களைப் பற்றிக் கேள்விப்பட்டு அதனைச் சுற்றிலும் ஒன்று திரள்கின்ற தூர நோக்கற்ற 'முதலீட்டாளர்கள்' காரணமாகவே அவ்வாறான முறைகள் உருவாகி, வளர்ச்சியடைகின்றன. இக்கட்டுரை எழுதப்படுவது, பொன்சியின் திறமைகளை மீண்டும் உலகின் முன்னிலையில் கூறுவதற்கல்ல என்பதோடு, இவர்கள் போன்றோரின் பேச்சில் மயங்கி தாம் மிகவும் கஷ்டப்பட்டு சம்பாதித்த சிறு தொகைப் பணத்தை இழப்பதற்கு முற்படுகின்ற அப்பாவி 'முதலீட்டாளர்களை' அறிவூட்டுவதற்காகும். ❍

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்கான ஒரு சுபீட்சச் சுட்டெண்

எஸ். சோமபால
பணிப்பாளர்
புள்ளிவிபரவியல் திணைக்களம்

இலங்கையின் சுபீட்சத்தை அளவிடும் பொருட்டு இலங்கை மத்திய வங்கி ஒரு புதிய சுட்டெண்ணை உருவாக்கியுள்ளது. இதனை உருவாக்குவதற்கான குறிக்கோள், அதன் உள்ளடக்கம் மற்றும் அதன் மூலம் நாட்டின் மாகாண மட்டத்தில் காட்டப்படுகின்ற பெறுபேறுகள் ஆகியவற்றைப் பற்றி சுருக்கமாக விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

1. பின்னணி

எல்லாக் கொள்கைகளினதும் இறுதிக் குறிக்கோள் உயர் சுபீட்ச மட்டத்தை அடைவதாகும். சுபீட்சமான ஒரு சமூகம் உடல்நலன்மிக்க, செல்வமும் மகிழ்ச்சியும் நிறைந்த மக்களைக் கொண்டிருக்கும். சுபீட்சம் என்ற சொற் பதத்தினுள் மிக விரிவானதொரு பொருள் பொதிந்துள்ளது. அபிவிருத்தியின் பிரதிபலன்களை சமூகத்தின் அனைத்துக் குழுக்களும் அனுபவிப்பதற்கு ஏற்பாடு செய்வதன் மூலம் நிலைத்திருக்கத்தக்க விதத்தில் நாட்டில் செல்வம் ஈட்டுவதன் ஊடாக மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் இதில் உள்ளடங்குகின்றது. சமநிலையான பிராந்திய அபிவிருத்தி இதற்கான ஒரு கட்டாய முன்தேவைப்பாடாக விளங்குகின்றது. நாட்டின் சமநிலையான பிராந்திய அபிவிருத்தியை அடையப்பெறும் பொருட்டு தேவையான கொள்கை வகுக்கும் அதிகாரம், மாகாண சபைகள் தாபிக்கப்படுகின்ற போது அரசியலமைப்பின் மூலம் நிதி ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 154ண. (5) வது உறுப்புரையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆணைக்குழு, நாட்டில் சமநிலையான பிராந்திய அபிவிருத்தியை எய்தும் நோக்கத்துடனான அத்தகைய நெறிகளை வகுத்தமைத்தல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க பின்வருவனவற்றைக் கருத்திற் கொள்ளுதலும் வேண்டும்:-

(அ) ஒவ்வொரு மாகாணத்தினதும் சனத்தொகை:
(ஆ) ஒவ்வொரு மாகாணத்தினதும் தலைக்குரிய வருமானம்:
(இ) பொருளாதார மற்றும் சமூக சமத்துவமின்மைகளைப் படிப்படியாகக் குறைப்பதற்கான தேவை: அத்துடன்
(ஈ) ஒவ்வொரு மாகாணத்தினதும் தலைக்குரிய வருமானத்திற்கும், மாகாணங்களுக்கு இடையிலான அதிஉயர் தலைக்குரிய வருமானத்திற்குமிடையேயான வித்தியாசத்தை படிப்படியாகக் குறைப்பதற்கான தேவை.

ஆதலால், சமநிலையான பிராந்திய அபிவிருத்தியை அளவிடும் பொருட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியை (மொ.உ.உ.) தாண்டிச் சென்ற அளவீடொன்றை உருவாக்குகின்ற தேவை மேலெழுந்தது. இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணை உருவாக்கியதன் மூலம் மேற்படி நீண்டகாலத் தேவை நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. பல நிறுவனங்கள் பல்வேறான மாறியல்களைப் பயன்படுத்தி சுகாதாரம், கல்வி, வறுமை, உட்கட்டமைப்பு வசதிகளைப் பெறுவதற்கான ஆற்றல் ஆகிய பல்வேறான துறைகளில் அடையப்பெற்றுள்ள சமூக பொருளாதார அபிவிருத்திகளை அளவிடும் பொருட்டு பல சுட்டெண்களை உருவாக்கியுள்ளன. ஆயினும் நாடு அல்லது நாட்டின் ஒரு மாகாணம் பெற்றுள்ள ஒட்டுமொத்தமான சுபீட்சத்தை அளவிடும் பொருட்டு இச்சுட்டெண்கள் போதுமானதல்ல. ஆதலால் நாடு ஒட்டுமொத்தமாகவும் அத்துடன் அதில் ஒவ்வொரு மாகாணம் என்ற வகையிலும் அடையப்பெற்றுள்ள சுபீட்சத்தை அளவிடும் பொருட்டு இணைந்த ஒரு சுட்டெண்ணை உருவாக்குகின்ற தேவை அதிகளவில் நிலவியது. இத்தேவையை நிறைவு செய்யும் பொருட்டு இலங்கை மத்திய வங்கி இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணை உருவாக்கியது.

இலங்கையின் சுபீட்சத்தை அளவிடும் பொருட்டான இப் புதிய சுட்டெண், அந்தந்த மாகாணம் அடையப்பெற்றுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு ஏற்ப அவற்றின் சுபீட்சத்தை அளவிடும் பொருட்டு மாகாண மேலாண்மைகளுக்கு, கொள்கை வகுப்போருக்கு, தொழிலதிபர்களுக்கு மற்றும் ஏனைய சமூகத்தினருக்கு போதியளவிலான ஒரு சுட்டெண்ணாக அமையும். இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணை மாகாணங்களின் சுபீட்ச மட்டத்தினை அளவிடுவதற்கு மட்டுமன்றி, பின்னடைவான மாகாணங்களை சுபீட்சத்தை அடையப்பெறும் நோக்கத்தின்பால் தூண்டுவதற்கும் பயன்படுத்தலாம். மேலும் இது அவர்களுடைய மாகாணங்களில் சாத்தியக்கூறுகளையும் பலவீனங்களையும் அடையாளம் காண்பதற்கும், உயர் தர ரீதியிலான ஒரு நிலைமையை அடையப்பெறுவதற்குத் தேவையான கொள்கைகளை வகுப்பதற்கும், மாகாணங்களுக்கு இடையே சாதகமானதொரு போட்டி ரீதியிலான இயல்பை ஏற்படுத்துவதன் மூலம் பிராந்திய பொருளாதார வளர்ச்சியின் ஊடாக நாட்டில் சமநிலையான பிராந்திய அபிவிருத்தியை உருவாக்குவதற்கும் உதவியாயமையும். அபிவிருத்தியின் பிரதிபலன்கள் மாகாணங்கள் மற்றும் அதன் மக்களுக்கு பரவுதலை அளவிடுவதற்கும் இச்சுட்டெண் உதவியாயமைகின்றது.

2. சுட்டெண்ணை உருவாக்குதல்

சுபீட்சத்தை அளவிடுவதற்கு சர்வதேச ரீதியில் பல்வேறு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணை உருவாக்குகின்ற போது அந்தந்த மாகாணங்களின் பொருளாதார மற்றும் தொழில்துறைச் சுற்றாடல், மக்கள் வாழ்க்கையின் நன்நிலைப்பாடு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஆகிய துறைகளில் உள்ள நிலைமைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

மாறியல்கள் தெரிவு செய்யப்படுகின்றபோது மூன்று பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரிட்டது. முதலாவதாக நாம் தெரிவு செய்த மாறியல்கள் மக்கள் வாழ்க்கையின் சுபீட்ச மட்டத்தினைப் பிரதிபலிப்பதாக இருத்தல் வேண்டும். இரண்டாவதாக, தரவுகளை மாகாண ரீதியில் காலத்திற்குக் காலம் தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்ள முடியுமாயிருத்தல் வேண்டும். இறுதியாக அத்தகைய மாறியல்கள் மாகாணத் தலைவர்களினதும் கொள்கை வகுப்போர்களினதும் தலையீட்டுடன் கொள்கை வகுக்கப்பட்டு தர ரீதியில் முன்னேற்றக் கூடியதாக இருத்தல் வேண்டும். இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணை கட்டியெழுப்பும் பொருட்டு மேற்படி தேவைகளைத் திருப்தி செய்கின்ற 20 மாறியல்கள் தெரிவு செய்யப்பட்டன.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மனித அபிவிருத்திச் சுட்டெண் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் கலிபோனியா பிராந்திய ஆராய்ச்சி நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட செக்றமென்டோ சுட்டெண் போன்ற சர்வதேச பயன்பாடுகளுக்கு இணங்கச் சென்று இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணை உருவாக்குகின்ற போது தெரிவு செய்யப்பட்ட மாறியல்களுக்கும் சமமான நிறையேற்றல்கள் செய்யப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட 20 மாறியல்களை அவதானித்த போது அவற்றை மூன்று உபசுட்டெண்களுக்குப் பிரிக்கலாம் என்பதைக் காணமுடியுமாயிருந்ததோடு, அந்த உபசுட்டெண்களில் உள்ளடங்கிய மாறியல்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஒவ்வொரு உபசுட்டெண்ணினதும் நிறையின் அளவு தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறு அந்தந்த மாகாணங்களின் பொதுவான பொருளாதார மற்றும் தொழில்துறை சுற்றாடலைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பொருளாதார மற்றும் தொழில்துறை சுற்றாடல் உபசுட்டெண்ணுக்கு ஏற்றப்பட்ட நிறை 30 சதவீதமாக இருந்தது. மாகாணத்தின் பொதுமக்களது சுகாதாரம், கல்வி மற்றும் குடும்ப அலகுகளின் வசதிகளின் முன்னேற்றத்தை அளவிடுகின்ற இரண்டாவது உபசுட்டெண்ணான மக்கள் வாழ்கையின் நன்நிலைப்பாடு பற்றிய உபசுட்டெண்ணுக்கு நிறையேற்றுதல் 45 சதவீதமாகும். சமூகத்தின் தரம் மற்றும் சேவைகளைப் பெறக்கூடிய ஆற்றல் உள்ளடங்கிய மூன்றாவது உபசுட்டெண்ணான அடித்தள வசதிகள் சுட்டெண்ணுக்கு நிறையேற்றுதல் 25 சதவீதமாகும். மேற்படி மூன்று உபசுட்டெண்களின் கூட்டுத்தொகையின் 100 சதவீதமாக இலங்கை சுபீட்சச் சுட்டெண் உருவாக்கப்படுகிறது. பின்வரும் அட்டவணை இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணுக்கும் உபசுட்டெண்களுக்கும் உரிய மாறியல்களைச் சுருக்கமாகக் காட்டுகின்றது.

ஒவ்வொரு மாறியலுக்குமான சுட்டெண் பெறுமதியானது அதற்குக் கிடைக்கக் கூடியதான உயர்ந்தபட்ச மற்றும் குறைந்தபட்ச பெறுமானங்களுக்கு ஒப்பீட்டளவிலேயே கணிப்பிடப்பட்டது. எவ்வாறாயினும், இவ்விடயத்தின் போது, மனித அபிவிருத்திச் சுட்டெண் கணிப்பிடப்படுகின்ற போது கடைப்பிடிக்கப்பட்டவாறான, தரவுகளின் அடிப்படையில் உயர்ந்தபட்ச மற்றும் குறைந்தபட்ச பெறுமதிகளைப் பயன்படுத்தாது அதற்குப் பதிலாக முன்கூட்டியே அடையாளம் காணப்பட்ட உயர்ந்தபட்ச மற்றும் குறைந்தபட்ச மட்டதிலான இரண்டு பெறுமானங்கள் நிர்ணயிக்கப்பட்டன. இச்சுட்டெண்களை குறிப்பிட்டதொரு கால வீச்சிடையினுள் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு வாய்ப்பளிக்கும் பொருட்டே அவ்வாறு செய்யப்பட்டது.

இவ்வாறு கணிப்பிடுகின்றபோது தெரிவு செய்யப்படுகின்ற உயர்ந்தபட்ச மற்றும் குறைந்தபட்ச மட்டங்களை எதிர்வரும் குறிபிடத்தக்கதொரு காலம் முழுதும் பயன்படுத்துவதற்கு முடியுமானதாயிருத்தல் வேண்டும். எப்போதும் 0 – 100 க்கு இடையிலுள்ள மாறியல் பெறுமானங்கள் வகுப்பதை இதற்கிணங்க மேற்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

$$I_i = \frac{V_i - V_{iw}}{V_{io} - V_{iw}}$$

Ii = I மாறியலுடன் தொடர்புடைய சுட்டெண் இலக்கம்
Vi = I மாறியலின் அவதானிப்பு
Vio = I மாறியலுக்கு இருக்க முடியுமான சிறந்த உயர்ந்தபட்சப் பெறுமதி
Viw = I மாறியலுக்கு இருக்க முடியுமான சிறந்த குறைந்தபட்சப் பெறுமதி

3. சுபீட்ச மட்டத்தின் பெறுபேறுகள்

2000-2007 கால கட்டத்தின் பொருட்டு ஒவ்வொரு உபசுட்டெண்ணும் பெற்றுள்ள புள்ளிகள் மாகாணங்களின்படி கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

3.1 பொருளாதார மற்றும் தொழில்துறை சுற்றாடல்

2007 பொருளாதார மற்றும் தொழில்துறை சுற்றாடலைக் கவனத்திற் கொள்கின்றபோது மேல் மாகாணம் 17.9 அளவிலான மிக உயர் பெறுமானத்தைப் பெற்றிருந்ததோடு, 10.2 வீதமான மிகக் குறைந்தளவு பெறுமானம் கிழக்கு மாகாணத்திலிருந்தே அறிக்கையிடப்பட்டது. தரப் படுத்தலின் போது 11.6 புள்ளிகளைப் பெற்று தென் மாகாணம் இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. 2000-2007 கால கட்டம் முழுவதிலும் மேல் மாகாணம் மாத்திரம் தேசிய மட்டத்தை விட உயர் மட்டத்திலான பெறுபேறுகளைக் காட்டியுள்ளது.

இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணுக்குரிய மாறியல்கள்

பொருளாதார, தொழில்துறை சுற்றாடல் (30%)	மக்கள் வாழ்க்கையின் நன்நிலைப்பாடு (45%)	உட்கட்டமைப்பு வசதிகள் (25%)
தலைக்குரிய வருமானம் (5%)	ஆஸ்பத்திரிக் கட்டில்கள் (அரச)(5%)	தலைக்குரிய மின்வலு நுகர்வு (5%)
தொழில் நிலை (5%)	மருத்துவர்கள் (அரச) (5%)	தொலைபேசி அடர்த்தி (5%)
முறைசாராத் துறை சம்பளம் (5%)	குழந்தை உயிர் பாதுகாப்பு (5%)	வங்கி அடர்த்தி (5%)
வறுமை மட்டத்திற்கு மேலுள்ள சனத்தொகை (5%)	தாய் உயிர் பாதுகாப்பு (5%)	வீதி அடர்த்தி (5%)
தலைக்குரிய மொத்த விற்பனைப் புரள்வு வரி வீதம் (5%)	பாடசாலை அடர்த்தி (5%)	சட்டமும் ஒழுங்கும் (5%)
தொழிற்சாலை அடர்த்தி (5%)	மாணவர் ஆசிரியர் விகிதம் (5%)	
	இரண்டாம் நிலைக் கல்வியின் தொடர்ச்சி (5%)	
	சாதாரண தரம் மற்றும் உயர் தரம் சித்தியடைகின்ற விகிதம் (5%)	
	வாகன உரிமை (5%)	

பொருளாதார மற்றும் தொழில்துறை சுற்றாடல் 2000-2007

மாகாணம்	2000	2001	2002	2003	2004	2005	2006	2007
மேல்	13.3	13.5	14.4	14.9	15.4	16.1	16.8	17.9
மத்திய	8.9	9.1	10.0	10.2	10.5	10.6	10.8	11.5
தென்	8.7	8.8	9.8	9.9	10.1	10.3	10.9	11.6
வடக்கு	8.8	9.4	9.9	10.1	10.4	10.4	10.7	11.1
கிழக்கு	7.3	7.4	8.6	9.0	9.1	9.4	9.7	10.2
வடமேல்	8.6	8.6	9.7	9.8	9.8	10.1	10.4	11.3
வட மத்திய	8.6	8.6	9.5	9.7	9.8	10.2	10.4	10.9
ஊவா	8.7	8.9	9.7	9.8	10.0	10.2	10.1	10.7
சப்பிரகமுவ	8.1	8.2	9.1	9.3	9.5	9.7	9.6	10.4
இலங்கை	9.8	10.1	11.0	11.2	11.5	11.9	12.3	13.0



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.2 மக்கள் வாழ்க்கையின் நன்நிலைப்பாடு

மேற்படி உபசுட்டெண்ணின் மூலம் மேல், மத்திய மற்றும் தென் மாகாணங்கள் மட்டும் தேசிய சராசரி மட்டத்தை விட உயர் மட்டப் புள்ளிகளைப் பெற்றுள்ளன. 2007 இல் 33.5 புள்ளிகளைப் பெற்று மேல் மாகாணம் முதலாவது இடத்தை வகித்ததோடு, வட மாகாணம் 25.1 புள்ளிகளைப் பெற்று இறுதி இடத்தை வகித்தது. எவ்வாறாயினும் நாடளாவிய ரீதியில் அரச துறையின் தலையீட்டுடன் சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளில் மேற்கொள்ளப்பட்ட உயர்ந்தளவு முதலீடுகளின் பெறுபேறாக மாகாணங்களுக்கிடையே மிகக் குறைவாகவே மாற்றத்தைக் காணக்கூடியதாயுள்ளது.

சர்வதேச மட்டத்திற்கு ஏற்ப நோக்குகின்றபோது சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளில் இலங்கை மிகவும் பாராட்டத்தக்க ஒரு நிலைமையைப் பெற்றுள்ளதென்பது பிரசித்தமானதொரு விடயமாகும்.

மக்கள் வாழ்க்கையின் நன்நிலைப்பாடு 2000-2007

மாகாணம்	2000	2001	2002	2003	2004	2005	2006	2007
மேல்	30.6	30.3	30.9	31.0	31.2	32.0	33.2	33.5
மத்திய	24.9	26.2	27.0	26.9	27.3	27.6	29.3	30.0
தென்	25.1	25.6	26.7	26.5	25.7	28.0	28.0	28.9
வடக்கு	20.1	21.4	21.4	22.1	22.5	24.4	25.6	25.1
கிழக்கு	21.1	22.2	21.7	21.9	23.1	23.8	25.0	25.8
வடமேல்	23.9	25.1	25.4	25.9	26.1	27.3	28.3	28.5
வட மத்திய	23.3	24.2	25.2	25.5	25.2	26.5	26.6	27.2
ஊவா	22.3	23.8	24.1	23.9	25.2	24.1	26.1	26.7
சப்பிரகமுவ	23.5	24.7	24.5	24.7	25.2	26.1	27.4	27.5
இலங்கை	24.8	25.7	26.1	26.3	26.4	27.4	28.4	28.9



3.3 சமூக பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள்

2007 ஆம் ஆண்டில் சமூக பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளின் போது மேல் மாகாணம் 14.6 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தை வகித்ததோடு, இறுதி நிலையிலுள்ள வட மாகாணம் 7.4 புள்ளிகளை மட்டுமே பெற்றது. மேல், மத்திய மற்றும் தென் ஆகிய மூன்று மாகாணங்களும் தேசிய மட்டத்தை விட உயர் நிலையில் உள்ளன என்பதோடு ஏனைய மாகாணங்களுக்கு இடையில் அவ்வளவு பெரிய மாற்றங்கள் இல்லை.

சமூக பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் 2000-2007

மாகாணம்	2000	2001	2002	2003	2004	2005	2006	2007
மேல்	11.3	11.6	11.5	11.7	11.8	12.2	13.2	14.6
மத்திய	8.6	9.0	9.2	9.4	9.3	9.6	10.3	11.4
தென்	7.9	8.6	8.6	8.7	8.6	9.2	10.0	11.0
வடக்கு	6.4	6.7	6.7	6.8	6.9	7.0	6.9	7.4
கிழக்கு	6.7	6.9	6.8	6.8	7.2	7.4	7.2	8.3
வடமேல்	7.2	7.5	7.6	7.9	8.0	8.3	8.9	9.9
வட மத்திய	6.6	6.6	6.5	7.0	7.0	7.5	8.6	10.2
ஊவா	7.0	7.6	7.6	7.7	7.8	8.0	9.1	10.4
சப்பிரகமுவ	7.4	7.8	7.6	7.7	7.7	8.1	9.1	10.4
இலங்கை	7.8	8.2	8.2	8.4	8.4	8.8	9.5	10.7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.4 ஒட்டுமொத்தமான சுபீட்சம்

மேலே குறிப்பிடப்பட்ட உபசுட்டெண்கள் மூன்றையும் இலங்கை சுபீட்சச் சுட்டெண் உள்ளடக்கியுள்ளது.

சுட்டெண்ணின்படி 2007 ஆம் ஆண்டில் 66.1 புள்ளிகளைப் பெற்று மேல் மாகாணம் மிகஉயர் சுபீட்சத்தை அறிக்கையிட்டுள்ளது. 2000-2007 காலகட்டம் முழுவதிலும் தேசிய சராசரி மட்டத்தை விட உயர் மட்டத்தில் தொடர்ந்து இருந்தது மேல் மாகாணம் மட்டுமேயாகும். மத்திய மாகாணம் 2005 ஆம் ஆண்டில் மட்டும் தேசிய மட்டத்தை விட 0.3 புள்ளிகளைக் குறைவாகப் பெற்றிருந்தது. ஒட்டுமொத்தமான சுபீட்சச் சுட்டெண்ணில் 2007 ஆம் ஆண்டில் வட மாகாணம் 43.6 புள்ளிகளான மிகக் குறைந்த மட்டத்தைப் பெற்றுள்ளது.

ஒட்டுமொத்தமான சுபீட்சம் 2000-2007

மாகாணம்	2000	2001	2003	2004	2005	2006	2007
மேல்	55.3	55.4	57.5	58.3	60.3	63.2	66.1
மத்திய	42.4	44.2	46.5	47.0	47.8	50.5	52.9
தென்	41.7	42.9	45.2	44.4	47.5	48.8	51.6
வடக்கு	35.4	37.5	39.1	39.8	41.8	43.3	43.6
கிழக்கு	35.1	36.5	37.6	39.3	40.5	41.9	44.2
வடமேல்	39.8	41.2	43.6	43.9	45.7	47.5	49.7
வட மத்திய	38.4	39.5	42.2	42.0	44.1	45.6	48.3
ஊவா	38.0	40.3	41.4	42.9	42.3	45.3	47.8
சப்பிரகமுவ	39.1	40.7	41.7	42.4	43.9	46.1	48.4
இலங்கை	42.4	43.9	45.9	46.4	48.1	50.3	52.7



4. தரவுகள் எவ்வளவு காலத்தில் இற்றைப்படுத்தப்படும்?

இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணின் தரவுகள் வருடாந்தம் இற்றைப்படுத்தப்படுகின்றன. காலப்போக்கில் ஏதேனுமொரு மாகாணத்தில் இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணில் நடைபெற்றுள்ள மாற்றங்களின் ஊடாக அதற்குரிய மாற்றமுறும் காரணிகளில் நடைபெற்றுள்ள பல்வேறான மாற்றங்கள் சுட்டிக்காட்டப்படும். அதேபோன்று கால வீச்சிடையினுள் சுட்டெண்ணின் மாற்றங்களின் மூலம் ஏதேனுமொரு மாகாணம் மேலுமொரு போட்டி ரீதியிலான மாகாணத்திற்கு ஒப்பீட்டளவில் எவ்வாறு சென்றுள்ளதென்பது சுட்டிக்காட்டப்படும்.

5 ம் பக்கத் தொடர்ச்சி.....

நியதிச் சட்ட ஒதுக்கு வீதத்தை மூன்று சந்தர்ப்பங்களில் முறையே 10% இல் இருந்து 9.25%, 7.75% மற்றும் 7% வரை குறைததமை மறறும சநதைத தரவத தனமைப பறறாககுறையின போது வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகள் வழங்கப்படுவதை (Reverse Repo Facility) மாதததிறகு உயர்நதபடசம 10 தடவைகள் வரை அதிகரித்தமை ஆகிய நடவடிக்கைகளின் காரணமாக திரவத் தன்மைப் பற்றாக்குறை ஏற்படக்கூடிய வாய்ப்புகள் அடைக்கப்பட்டுள்ளன.

(எவ்வாறாயினும், பின்னர் திரவத்தன்மைப் பற்றாக்குறை நிலைமை தணிந்ததும் அது மீண்டும் மூன்று தடவைகள் வரை குறைக்கப்பட்டது.)

அதேபோனறு மததிய வஙகியின நேர்மாறறு மீள்கொள்வனவு வசதியின் மீது விதிக்கப்பட்டிருந்த அபராத வட்டி வீதம் 19 சதவீதத்திலிருந்து 16.50 சதவீதம் வரை குறைக்கப்பட்டமையும், மத்திய வங்கி கொள்கை வட்டி வீதமான மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வட்டி வீதங்கள் 25 சதவீதத்தால் குறைக்கப்பட்டமையும் நடைபெற்றது.

இவ்வாறு இலங்கை மத்திய வங்கி பொருளாதாரத்தில் நடைபெறுகின்ற மாற்றங்கள் தொடர்பாக மிகவும் கவனமாக் இருந்து உள்வாரி மற்றும் வெளிவாரித் தாக்கங்களால் உருவாகினற அதிர்சசிகளிலிருநது பாதுகாபபுபெறறு நிதியியல முறைமையின் உறுதிப்பாட்டைப் பேணிவரும் பொருட்டு காலத்திற்குப் பொருத்தமானதும், மதிநுட்பமுடையதுமான நடவடிக்கைகளின் பிரகாரம் தொடர்ந்து செயலாற்றி வருகின்றது. ○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய வங்கியைப் பற்றி ....

1948 இல் சுதந்திரம் கிடைக்கின்ற போது இலங்கையின் பண நிரம்பல், நாணயச் சபையினாலேயே கட்டுப்படுத்தப்பட்டது. மேற்படி முறையின் கீழ் நாணயங்களின் வெளியீடு மற்றும் கட்டுப்பாடு காலனித்துவச் செயலாளர், திறைசேரிப் பொறுப்பாளர் மற்றும் கணக்காய்வாளர் அதிபதி ஆகிய மூன்று நபர்கள் உள்ளடங்கிய ஆணையாளர் சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இலங்கை ரூபா, ஒதுக்குப் பணமாகக் கருதப்பட்ட இந்திய ரூபாவுடன் நேரடியாகவும், அதன் ஊடாக ஸ்டர்லின் பவுணுடன் மறைமுகமாகவும் பிணைக்கப் பட்டிருந்தது. இந்திய ரூபாக்களி லான இலங்கையிலுள்ள ஒதுக்குத் தொகை அதிகரிக்கின்ற போது மட்டும் இலங்கை ரூபாக்களின் வெளியிடுதலை அதிகரிக்க முடியுமாயிருந்ததோடு, இந்திய ரூபாவிலான ஒதுக்குத் தொகை குறைவடைகின்ற போது வெளியிடப்படுகின்ற இலங்கை ரூபாவின் தொகையையும் குறைக்க வேண்டி நேரிட்டது. இதனால் பண நிரம்பல் சென்மதி நிலுவையுடன் நேரடியாக பிணைக்கப்பட்டிருந்தது. அதில் மிகையொன்று உள்ளபோது நாணய வெளியீடு விரிவடைந்ததோடு, பற்றாக்குறை நிலவுகின்றபோது நாணய வெளியீடு சுருங்கியது. இதற்குப் புறம்பாகச் சென்று பொருளாதாரத்தின் தேவைகளுக்கு இணங்குகின்றவாறு நாணயத்தை வெளியிடவோ கட்டுப்படுத்தவோ முடியாதிருந்தது.

நாணயச் சபை முறையிலிருந்த இவ்வாறான பல்வேறு மட்டுப்பாடுகள், பலவீனங்கள் மற்றும் குறைபாடுகள் காரணமாக பொருளாதார நடவடிக்கைகள் விரிவடைவதற்குள்ள வாய்ப்புகளும் வழிகளும் மறைக்கப்பட்டிருந்தன. பொருளாதாரத்தின் நிதியியல் தேவைகளை ஒழுங்காக நிறைவேற்றி பொருளாதாரத்தை நெறிப்படுத்துவதற்கான சுதந்திரம் மேற்படி முறையினுள் இருக்கவில்லை. இதனால் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை நெறிப்படுத்து கின்றபோது தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்கும் வழிகாட்டல்களுக்குமான பலம்பொருந்திய ஒரு நிறுவனத்தின் தேவை அப்போது நாட்டினுள் கடுமையாக உணரப்பட்டது. 1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் கீழ் 1950 ஆகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி இலங்கை மத்திய வங்கி இத்தேவையை நிறைவேற்றுவதற்காகவே தாபிக்கப்பட்டது.

மத்திய வங்கியின் நோக்கங்கள் மற்றும் அதனால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைப் பொறுப்புகள் எவையென்பது நாணய விதிச் சட்டத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. நீண்ட காலத்திற்கு நாணயத்தின் உள்நாட்டுப் பெறுமதியை நிலையானதாக வைத்திருத்தல், செலாவணி வீதத்தின் உறுதித் தன்மையைப் பாதுகாத்தல், உற்பத்தி, தொழில் நிலை மற்றும் உண்மை வருமானத்தை அதிகரிக்கச் செய்தல், உற்பத்தி வளங்களை முழுமையாக அபிவிருத்தி செய்தல் ஆகிய பல நோக்கங்களை நிறைவேற்றுதல் மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆயினும் பல தசாப்தங்களாக இலங்கையில் நிலவிய மூடிய பொருளாதார முறையினுள் நிதியியல் துறை மற்றும் நிதியியல் நடவடிக்கைகள் மிகச் சிக்கலானதாக இருக்காததன் காரணமாக மத்திய வங்கிக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஒரு கடமைப் பொறுப்பே ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆயினும் திறந்த பொருளாதார முறையின் வருகையைத் தொடர்ந்து நிதியியல் துறை முன்னர் எப்போதும் இல்லாதவாறு விரிவடைந்ததோடு, அதற்கு நேரொத்த விதத்தில் மத்திய வங்கியின் கடமைப் பொறுப்புகளும் மிக மிக விரிவடைந்தன.

மாற்றமடைகின்ற பொருளாதார நிலவரங்களுக்கு ஏற்ப படிப்படியாக விரிவடைந்த மற்றும் விரிவடைந்து வருகின்ற மத்திய வங்கி, 2002 ஆம் ஆண்டின் திருத்தப்பட்டவாறான நாணய விதிச் சட்டத்தின் பிரகாரம் தற்போது பிரதானமான இரண்டு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. இவ்விரண்டு பிரதானமான நோக்கங்கள் யாதெனில்,

- பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு, மற்றும்
- நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு ஆகும்.

இந்த இரண்டு கடமைகளுடன் பிணைந்துள்ள நாணய வெளியீடு மற்றும் விநியோகமும் இலங்கை மத்திய வங்கிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள சிறப்பியல்புவாய்ந்த ஒரு கடமைப் பொறுப்பாகும். இலங்கையின் சட்ட ரீதியான நாணயமாகக் கருதப்படுகின்ற நாணயத் தாள்கள் மற்றும் குத்திகளை வெளியிடுகின்ற முழுமையான அதிகாரம் மத்திய வங்கிக்கே உரித்தாயுள்ளது.

மேற்படி கடமைகளுக்கு மேலதிகமாக அரச முகவர் என்ற வகையிலும் மத்திய வங்கி ஒருசில கடமைகளில் ஈடுபடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய கடமைகள் யாவையெனில்,

- வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம்
- பொதுப் படுகடன் முகாமைத்துவம்
- பிராந்திய அபிவிருத்தி
- ஊழியர் சேம நிதியத்தின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் ஆகியனவாகும்.

பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு

விலை உறுதிப்பாடு என்பதன் மூலம், பொருளாதாரத்தின் சராசரி விலை மட்டம் மாற்றமடைகின்ற வேகம் எனப்படுகின்ற பணவீக்கம் தீவிரமாகத் தளம்பலுக்கு உள்ளாகாது, ஒப்பீட்டளவில் குறைந்த மட்டத்தில் நிலவுகின்ற நிலைமையே கருதப்படுகின்றது. அவ்வாறானதொரு நிலைமையினுள் குடும்பங்கள் மற்றும் தொழில்துறை நிறுவனங்களில் பொருளாதார தீர்மானங்களை மேற்கொள்ளுதல் தொடர்பில் விலை மட்டத்தின் மாற்றங்கள் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தாது. ஆயினும் சராசரி விலை மட்டத்தில் தொடர்ச்சியாக நடைபெறுகின்ற அதிகளவிலான அதிகரிப்பு பொருளாதாரத்தில் பல்வேறான பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தும். விலை மட்டம் அதிகளவில் தொடர்ச்சியாக மாற்றமடைகின்றபோது முதலீட்டாளர்கள் நீண்ட கால முதலீடுகளில் கவனம் செலுத்த மாட்டார்கள். மறுபுறம், விலை மட்டத்தின் மாற்றம் எதிர்வுகூறக்கூடிய குறைந்த மற்றும் உறுதியான மட்டத்தில் உள்ளதென முதலீட்டாளர்களிடையே நம்பிக்கை நிலவுமெனில் அவர்கள் நீண்ட கால முதலீடுகளுக்கு அதிகளவில் முற்படுவார்கள். இது பொருளாதார அபிவிருத்திக்கு சாதகமானதொரு பின்னணியை அமைக்கும். மறுபுறம், விலை மட்டம் மாற்றமடைகின்ற வேகம் எதிர்மறையான பெறுமானத்தைக் கொண்டிருத்தல் எனப்படுகின்ற பணச்சுருக்க நிலைமையும் பொருளாதார உறுதிப்பாட்டுக்குப் பாதகமானதாகும்.

ஆதலால் உயர் பணவீக்க நிலைமைகளினால் பொருளாதாரத்திற்கு ஏற்படக்கூடிய பாதகமான தாக்கங்களைத் தணித்தல் இலங்கை மத்திய வங்கியின் பிரதானமானதொரு கடமையாகும்.

விலை உறுதிப்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற முக்கியமான காரணி பண நிரம்பலாகும். ஏதேனுமொரு காரணத்தினால் பொதுமக்களிடமுள்ள பணத் தொகை அதிகரிப்பின் அவர்களது பண்டங்கள் மற்றும் பணிகளைக் கொள்வனவு செய்வதற்கான கேள்வி அதிகரிக்கும். ஆயினும் அதிகரிக்கின்ற கேள்வியை நிறைவு செய்வதற்குப் போதியளவு பண்டங்கள் மற்றும் பணிகளின் நிரம்பல் அதிகரிக்காதிருப்பின், அதன் பெறுபேறாக பண்டங்கள் மற்றும் பணிகளின் விலைகள் நிச்சயமாக அதிகரிக்கும். பண நிரம்பல் என்பதன் மூலம் கருதப்படுவது, இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படுகின்ற நாணயக் குத்திகள் மற்றும் தாள்கள் உள்ளடங்கிய நாணயங்கள் மட்டுமல்ல. இதனைப் பற்றி ஆராய்கின்றபோது இலங்கையின் பண நிரம்பலுடன் தொடர்புடைய பின்வரும் விதத்திலான பிரதானமான பணக்கூட்டுக்கள் பலவற்றை அடையாளம் காணலாம்.

1. ஒதுக்குப் பணம்
   - பொதுமக்களால் வைத்திருக்கப்பட்ட நாணயம்
   - வர்த்தக வங்கிகளிடமுள்ள நாணயம்
   - மத்திய வங்கியிலுள்ள வர்த்தக வங்கிகளின் வைப்புகள்
   - மத்திய வங்கியிலுள்ள அரச முகவர்களின் வைப்புகள்

   (ஒதுக்குப் பணம், தள நாணயம் அல்லது அதி சக்திவாய்ந்த பணம் எனவும் குறிப்பிடப்படும்)

2. குறுகிய பண நிரம்பல் (M_1)
   - பொதுமக்களால் வைத்திருக்கப்பட்ட நாணயம்
   - வர்த்தக வங்கிகளில் பொதுமக்களால் வைத்திருக்கப்பட்ட கேள்வி வைப்புகள்

3. விரிந்த பண நிரம்பல் (M_2)
   - குறுகிய பண நிரம்பல் (M_1)
   - வர்த்தக வங்கிகளிலுள்ள தவணை மற்றும் சேமிப்பு வைப்புகள்

4. திரண்ட விரிந்த பண நிரம்பல் (M_{2b})
   - விரிந்த பண நிரம்பல் மற்றும்
   - வர்த்தக வங்கிகளின் கரைகடந்த வங்கிக் கிளைகளின் வெளிநாட்டு நாணய வைப்புகள்

பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டைப் பாதுகாக்கின்ற குறிக்கோளை நிறைவேற்றுகின்ற போது மத்திய வங்கி தனது நாணயக் கொள்கையைப் பயன்படுத்தும். நாணயக் கொள்கையானது நாணயக் கூட்டுக்களை இலக்காகக் கொண்ட கட்டமைப்பினுள் செயற்படுத்தப்படும் என்பதோடு, இதில் ஒதுக்குப் பணத்தை தொழிற்பாட்டு இலக்காகவும், விரிந்த பணத்தை (M_{2b}) இடைநிலை இலக்காகவும் பிரயோகித்து பணத்தின் செலவினத்தில் அதாவது, வட்டி வீதத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதற்கும் ஒட்டுமொத்தமான பணத் தொகையின் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் பண நிரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கும் மத்திய வங்கி நடவடிக்கை எடுக்கின்றது. இதன் பொருட்டு விரிந்த ஒரு வீச்சிடையுடன் கூடிய கருவிகள் மத்திய வங்கியிடம் உள்ளன. தற்போது நாணயக் கொள்கையைச் செயற்படுத்துகின்ற போது மத்திய வங்கி முக்கியமாகப் பயன்படுத்துகின்ற கருவிகளாக,

- கொள்கை வட்டி வீதம் மற்றும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்
- நியதிச் சட்ட ஒதுக்குத் தேவைகள் மற்றும்
- நாகரிகமான உபாய வழிமுறைகள், உள்ளன.

- வினீதா ஹேரத்

கொழும்பு – 13, 207, சேர் இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தையிலமைந்துள்ள (ஆட்டுப்பட்டித்தெரு) கௌரி அச்சகத்தில் அச்சிடப்பட்டு இலங்கை மத்திய வங்கி தொடர்பூட்டல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org